பக்கங்கள் : பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 16 திங்கட்கிழமை (30.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 215

# இலங்கையில் மனித உரிமை நிலைவரம்: அரசிடம் கேள்வி எழுப்புகிறது பிரான்ஸ்!

## ஒப்புக்கொள்கிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, ஜூன் 30

**ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய தலைமைப் பொறுப்பை நாளை முதல் ஏற்கவிருக்கும் பிரான்ஸ், இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் குறித்துக் கேள்வி எழுப்பியிருக்கின்றது.**

**பிரான்ஸுடன் பேச்சு நடத்துவதற்குச் சென்றிருந்த இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இத்தகைய கேள்வியை பிரான்ஸ் எழுப்பியது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்.**

இலங்கையிலிருந்து ஆடைகள் உட்பட முக்கிய பொருள்களை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகைகளை மேற்கு நாடுகளிடமிருந்து தொடர்ந்து பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தும் எத்தனமாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடந்த வாரம் பிரான்ஸுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அந்த நாட்டின் சர்வதேச வர்த்தக அமைச்சர் ஆன் மரை இட்ராக் உட்பட பலருடனும் தாம் மேற்கொண்ட பேச்சுக் குறித்து அவர் இணையத்தளமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் சர்வதேச வர்த்தக அமைச்சருடன் ஜி.எஸ்.பி.வரிச்சலுகை குறித்து ஆராய்ந்தேன். 2009ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை ஜி.எஸ்.பி.வரிச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

கல்விச்சுடர்

7 ஆம் பக்கத்தில்:
க.பொ.த (உயர்தர)மாதிரி வினாத்தாள்
★ இரசாயனவியல்

8 ஆம் பக்கத்தில்;
★ தரம் - 5 மாணவருக்கான இலகுவழிப் பரீட்சை

## வவுனியாவில் சடலங்கள் மீட்பு

வவுனியா, ஜூன் 30

வவுனியா, மன்னார் வீதியில் உள்ள இருவேறு பகுதிகளில் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி உயிரிழந்த இரு இளை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காய் உதவி அரச அதிபர் கிளைமோரில் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூன் 30

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் துணுக்காய் உதவி அரச அதிபர் நாகலிங்கம் நந்தகுமார் (வயது - 36) என்பவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

துணுக்காய் பிரிவில் உள்ள அம்பலப்பெருமாள் குளத்துக்கும் கோட்டைகட்டின குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இந்தத்தாக்குதல்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ ஊடுருவும் அணியைச் சேர்ந்தவர் பூநகரியில் புலிகளின் தாக்குதலில் பலி

வவுனியா, ஜூன் 30

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, வன்னேரியில் நேற்றுக்காலை அரச படையினரின் ஆழ ஊடுருவும் அணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்று புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

பூநகரியில் உள்ள ஜெயபுரம், முறிகண்டி வீதியில் வன்னேரிக்கு சமீபமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பயணிகள் பஸ்ஸைத் தாக்குவதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோதே ஆழ ஊடுருவும் அணியைச் சேர்ந்த ஒருவர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பொலிஸ்மாஅதிபர் நாளை பதவியேற்பு

கொழும்பு, ஜூன் 30

புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள ஜயந்த விக்ரமரட்ன நாளை பதவியேற்கவுள்ளார்.

நாளை காலை 7 மணி முதல் 10 மணி வரை இப்பதவியேற்பு வைபவம் கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெறும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அருகிலும் இனிமேல் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை!

### தலைநகரின் பந்தோபஸ்துக்குப் புதிய அவசரகால விதி வருகிறது

கொழும்பு, ஜூன் 30

கொழும்பின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மட்டுமல்லாமல் இனிமேல் அவற்றுக்கு அருகிலும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதைத் தடை செய்யும் புதிய அவசரகால ஒழுங்கு விதி குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பிக்கு மாணவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மகஜரைக் கையளிப்பதற்காக அலரிமாளி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அன்பார்ந்த வாசகர் பெருமக்களே!

நாளாந்தம் ஏதோ ஒரு பொருளின் விலை நாட்டில் உயர்வடைவது நடைமுறையாகிவிட்டது; வழமையாகி விட்டது. எரிபொருள்களின் விலைகள் உயர உயர, எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறுகின்றன. இன்றைய ஆட்சியில் இது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது.

குடாநாட்டிலோ, 2006 ஓகஸ்ட் 11 ஆம் திகதிக்குப் பின்னர் எல்லாமே அதிக விலை; கூடிய விலைதான்! மாதத்துக்கு மாதம் விலை உயர்வுகள் குடாநாட்டு மக்களை நசுக்கியதால், அரசு சுமத்திய எத்தனையோ விலை உயர்வுகளின் மத்தியிலும் உதயனின் விலையை இத்தனை மாதங்களாக உயர்த்தாமல் உற்பத்திச் செலவில் உண்டான முழுப் பளுவையும் நாமே ஏற்றுக் கொண்டோம்.

இப்போது தாங்கமுடியாது என்ற இக்கட்டான, இடர்ப்பாடான நிலையில் உதயனின் விலையை ஐந்து ரூபாவால் (ரூபா 5/=) அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எங்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு, ஒத்துழைப்பு நல்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**நாளை செவ்வாய்க்கிழமை ஜூலை முதலாம் திகதி தொடக்கம் உதயனின் விலை 15/= ரூபாவாகும்.**

**- நிர்வாகத்தினர்.**

## கொழும்புக்கு வருவதைத் தவிர்க்குமாறு தமிழர்களை தான் கோரியமை நியாயம் என்கிறார் மனோ கணேசன்

### வெள்ளவத்தை கைதுகள் நிரூபிப்பதாக சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 30

'வடக்கு - கிழக்கு மக்கள் கொழும்புக்கு வருவதைத் தற்காலிகமாகத் தவிர்க்க வேண்டும்' என்று நான் முன்னர் கூறிய கூற்றின் நியாயத்தைக் கடந்த சனிக்கிழமை வெள்ளவத்தையில் கண்மூடித்தனமாகப் பலர் கைது செய்யப்பட்டமையும், தலைநகரிலும் அதை அண்டிய பிரதேசங்களிலும் வகை, தொகையின்றி இடம்பெறும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நீண்ட காலத்துக்குத் தொடர்வது கடினம் இலங்கை அரசுக்கு இந்தியா இப்படி உபதேசம்

கொழும்பு, ஜூன் 30

இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பான சர்வதேச அழுத்தங்கள் போன்றவை காரணமாக இலங்கை அரசு நீண்ட காலத்திற்கு இராணுவ நடவடிக்கையைத் தொடர்வது கடினமானது என இலங்கைக்கு வலியுறுத்திக் கூறியுள்ளது இந்தியா. யுத்தம் விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக மாறுவதைத் தவிர்ப்பதற்காகப் பேச்சு மூலமான அரசியல் தீர்வு குறித்து சிந்திக்குமாறும் அது இலங்கையை வலியுறுத்தியுள்ளது.

இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம். கே.நாராயணன், வெளிவிவகாரச் செயலாளர் சிவசங்கர் மேனன், பாதுகாப்பு செயலாளர் விஜய்சிங் ஆகியோரைக் கொண்ட உயர் மட்டக் குழுவினரின் சமீபத்திய இலங்கை விஜயத்தின் போதே இக்கருத்து முன்வைக்கப்பட்டுள்ளதாக இப்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

விரிவான கட்டுரை 13 ஆம் பக்கத்தில்

சார்க் உச்சி மாநாட்டிற்கு முன்னதாக இலங்கை அரசு அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் எனக் கேட்டுள்ள இந்தியக் குழுவினர், இல்லாவிடில் இந்தியப் பிரதமரின் 'சார்க்' உரையின் போது இலங்கை தர்மசங்கட நிலைமை ஒன்றை எதிர்கொள்ள நேரும் என்றும் எச்சரித்துள்ளதாம்.

மேலும் கிழக்கு மாகாண (14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாதேவி சேவியர் (குஞ்சு)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், 16, மடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சேவியர் (குஞ்சு) 27.06.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெண்டரேசர் கந்தையா - நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையாவின் மருமகளும், காலஞ்சென்ற K.F.சேவி யரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தெய்வா னைப்பிள்ளை, கனகசுந்தரம், வெண்டரசு, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜறின்பிரேமினி (ஜேர்மனி), யூட்பிறேமராஜ் (பிரான்ஸ்), செறின்லக்சினி (பிரான்ஸ்) ஆகி யோரின் அன்புத் தாயும், சோமாஸ்கந்தா (ஜேர்மனி), வெனியா (ஜனா - பிரான்ஸ்), தயானந் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெரமி (பிரான்ஸ்), சோபிகா (ஜேர்மனி), தர்சிகா (ஜேர்மனி), எலிக் (ஜேர்மனி), ஆர்த்திகா (ஜேர்மனி), ஏஞ்சலா (பிரான்ஸ்), நிரஞ்சலா (பிரான்ஸ்), சஞ்சேய் (பிரான்ஸ்), அஜய் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் போத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (01.07.2008) பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.நவரட்ணசிங்கம் (பெறாமகன்),
திருமதி.விபுசிக்கா றொபின் (பேர்த்தி - லண்டன்)

21/4, அடப்பன் றோட்,
யாழ்ப்பாணம்.

## செல்லையா செல்வராசா



ஊரெழுவைப்பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா செல்வராசா நேற்று (29. 06.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் குகனேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரகாஸ் (SOND), மோகனதாஸ், திலீபன் (சாந்திகம்), தர்சினி (உதவி ஆசிரியர், யா/ஊரெழு கணேச வித்தியாசாலை), அனுலா (தாதியர் பயிற்சிக்கல்லூரி 1ம் வருடம்) கல்ப்பனா (மாணவி, யா/உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2008) திங்கட்கிழமை பி.ப 12.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (75885)

தகவல்:
குடும்பத்தினர்

## செல்வி கமலபூரணம் தம்பிப்பிள்ளை (கமலா)



சரவணை கிழக்கு, பள்ளம்புலத்தை பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கமலபூர ணம் தம்பிப்பிள்ளை நேற்று (29.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- பாலோசனி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், விஜயலட்சுமியின் பாசமிகு சகோதரியும் ஆனந்தசோதியின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான வாசுகி, வாகீசன் மற்றும் பிரகீசன், வானுஜி, கஜனி ஆகியோரின் பெரிய தாயாரும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் பெறாமகளும், நாகம்மா, ராசம்மா ஆகியோரின் மருமகளும் மற்றும் சண்முகநாதன் (லண்டன்), அன்னலட்சுமி, புவனேஸ்வரி(கனடா) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2008) திங்கட்கிழமை காலை 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.
077 9773418

தகவல்:
ந.ஆனந்தசோதி (மைத்துனர்)
ஆ.விஜயலட்சுமி (சகோதரி)

## செல்வி அப்புத்துரை ஞானேஸ்வரி



கலைமகள் வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், சந்தை வீதி, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி அப்புத்துரை ஞானேஸ்வரி (27.06.2008) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அப்புத்துரை(சிவசுந்தரம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை- பறுவதம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான தம்பையா- தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலதாஸ், சண்முகதாஸ், கிருஷ்ணதாஸ், பத்மினி(ஆசிரியை, தொண்டைமானாறுவீ.ம.வி), சிலோஜினி (மு/வித்தியானந்தாக் கல்லூரி), உருத்திரேஸ்வரன் கலைவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜிதாம்பிகை, சாந்தி, சந்திரகலா, ஸ்ரீகாந்தன், மோகனதாஸ், புஸ்பரதி, தமிழ்ச்செல்வன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அஸ்வின், கர்ணன், அபிராம், தர்சிகா, கம்சிகா, பிரியங்கன், கவிப்பிரியன், அபர்ணா, இலக்கியன், யாமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2008) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை வீதி, இமையாணன்,
உடுப்பிட்டி.

தகவல்:
திருமதி பத்மினி சிறிகாந்தன் (மகள்)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேதகண்ணலிங்கேஸ்வர ஆலய பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப 11.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர் வரும் 8ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 30

கோப்பாய் தெற்கு தனிப்பனை பத்திரகாளி அம்பாள் ஆலய பெருந் திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (203)

* * *

வலிதென்மேற்கு, ஜூன் 30

சில்லாலை நரசிம்மவயிரவர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை தீமிதிப்பு நடைபெறும் (203-135)

* * *

வலிதென்மேற்கு, ஜூன் 30

சித்தன்கேணி சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வர ஆலய வருடாந்த பெருந் திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து திருவிழா நடைபெற்று எதிர் வரும் 8ஆம் திகதி பஞ்சரத பவனியும், 9ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (203-135)

* * *

சாவகச்சேரி சந்திர சேகர வாரிவன சிவன் கோவில் பெருந் திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்த 10தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203-207)

* * *

சாவகச்சேரி டச்வீதி ஸ்ரீபழனி ஆண்டான் ஆலய அலங்காரத்திருவிழா எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 18நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி ஆடிவேல் பவனியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் (203-207)

* * *

இணுவில் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு இடம் பெறவுள்ளது. மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (203)

* * *

மருதமடுத் திருப்பதியின் திருவிழா கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை கொண்டாடப் படவுள்ளது.

ஆயத்த வழிபாடுகள் இன்றும் நாளையும் 4.30மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். திருவிழா திருப்பலி 20ஆம் திகதி புதன்கிழமை காலை 6.15மணிக்கு இடம் பெறும். குருச் சொரூப பவனியும் ஆசீரும் இடம் பெறும்.

மடுத்திருப்பதி மீண்டும் வழிபாடுகளுக்கு புனிதத்தன்மைக்கும் உரிய இடமாக பேணப்பட வேண்டும் என்ப தையும் சமாதானத்தையும் வேண்டி சிறப்பு வழிபாடுகள் இடம்பெறும்.

### ஆசீர் வதிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்30

நவாலி மகாவித்தியாலயத்தில்ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்பில் இணைந்து கொண்ட மாணவர்களை ஆசீ வதிக்கும் நிகழ்வு இன்றுதிங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

பாடசாலை முதல்வர் இரா.வசந்தகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

பிரதம அதிதியாக வலிகாமம்வலயமுன்னாள் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன் கலந்து கொள்வார்.

40வருடங்களின் பின்இந்தப்பாடசாலையில் ஜீ.சி.ஈ. உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 20மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### மனித உரிமை ஆணைக்குழு வாகனத்தில் ஆயுதங்கள் மீட்பு

# சாரதி உட்பட கைதான நால்வருக்கு ஜூலை 8ஆம் திகதி வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தின் வாகனத்தில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள நால்வரையும் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆணைக்குழுவின் வாகனம் ஒன்று திருத்த வேலைக்காக மானிப்பாயில் உள்ள 'கராஜ்' ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த வாகனத்தில் இருந்து ஆயுதங்கள் மானிப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டி ருந்தன.

இச்சம்பவம் தொடர்பாக அவ் வாகனத்தின் சாரதியான நாகரத்தினம் சசிதரன்(சட்டநாதர் வீதி, நல்லூர்), கராஜ்சில் பணிபுரியும் கந்தையா மகேந்திரராஜா (வி.கே.லேன், மானிப்பாய்), கதிரவேலு குணரத்தினம்(சுதுமலை), கந்தசாமி வாகீசன்(வட்டுக்கோட்டை தெற்கு) ஆகியோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

பிரஸ்தாப நபர்கள் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் நேற்று ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களை விசாரனை செய்த நீதிவான் நால்வரையும் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு அன்று வரை வழக்கை ஒத்திவைத்தார்.

(அ-01-203)

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி
426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.

# துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவனத்தின் கள இணைப்பாளர்
**செல்வராசா பிரகாஸ்**
அவர்களின் அன்புத் தந்தை
**செல்லையா செல்வராசா**
அவர்களின் திடீர்மறைவினால் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து அவரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கிறோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
SOND நிறுவனம், யாழ்ப்பாணம்.
(75886)

# மரணஅறிவித்தல்

## நற்குணசிங்கம் றோசம்மா



இல 100, சேர் பொன்.இராமநாதன் வீதி, (கலட்டி) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நற்குணசிங்கம் றோசம்மா நேற்று முன்தினம் (28.06.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-சின்னப்பிள்ளையின் அன்பு மகளும், நற்குணசிங்கத்தின் அன்பு மனைவியும், குணதாசன், யோகராஜா, யோகராணி, குகதாசன், ஜெயகௌரி, நிரூபா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா, சின்னத்தம்பி மற்றும் நடேசு, தங்கச்சியம்மா, செல்லத்துரை, தம்பித்துரை, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.நற்குணசிங்கம் (கணவர்)
(75889)

# எமது தந்தையாரின் நான்காம் ஆண்டு நினைவும் தாயாரின் அந்தியேட்டி நிகழ்வும்



## கதிர்காமு சுப்பிரமணியம்

மறைவு
30.06.2004

## சுப்பிரமணியம் புவனேஸ்வரி

மறைவு
31.05.2008

அன்பான தந்தையே நான்காண்டுகள் நினைவில் வந்து தாயாரையும் அழைத்துச் சென்றீர்களா!

இருவரும் சொர்க்கத்தில் இணைந்திருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று (30.06.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

* இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளவும்.

'திசைகாட்டி' என்னும் கல்வியியல் சார் கட்டுரைகளின் தொகுப்பு வெளியீடும் நடைபெறும்.

பிள்ளைகள்: சு.மகேஸ்வரன், சு.புவனேஸ்வரன் (சுவிஸ்), சு.வாகீஸ்வரன் (சுவிஸ்), ஜெ.சத்தியவாணி.

மேற்கு,
அல்வாய்.

மதுரன் கிறா (F)பிக்ஸ் அன்ஒவ்செற் பிறின்ரேர்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் 35 அபிவிருத்தித் திட்டங்களுக்கென 5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜூன்30

யாழ்.மாவட்டத்தில் 35 அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கென மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.பிரேமச்சந்திரன் 5 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து அந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக அவரது செயலாளர் அ. உதயகுமார் தெரிவித்தார்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கு 300 ஆயிரம் ரூபாவும், தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கு 375 ஆயிரம் ரூபாவும் -

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கு 225 ஆயிரம் ரூபாவும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கு 3.1 மில்லியன் ரூபாவும்-

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கு 650 ஆயிரம் ரூபாவும், உடுவில் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கு 50 ஆயிரம் ரூபாவும்,தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கு 100 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஏனைய சில அபிவிருத்திப் பணிகளுக்கென 200 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202)

# மினிபஸ் சாரதிகளின் கவனக் குறைபாட்டாலேயே தொடர்ந்து விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன

## மக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்30

தனியார் மினிபஸ் சாரதிகளின் கவனக் குறைபாடு மற்றும் போட்டித்தன்மை காரணமாக நாளுக்கு நாள் விபத்துகள் அதிகரித்து வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் உடைமைச் சேதங்கள் மட்டுமின்றி உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றன.

வீதிகளில் வாகனங்களின் சாரதிகள் தினமும் போட்டி போட்ட வண்ணம் வாகனங்களைச் செலுத்தி வருகின்றனர். இதனால் மக்கள் பஸ்களிலும் வீதிக ளிலும் பயணம் செய்வதற்குப் பெரும் அச்சம் அடைவதாகக் கூறப்படுகின்றது.

வாகனச்சாரதிகள் பொறுப்புடன் போட்டி போட்டு வாகனங்களைச் செலுத்து வதைத் தவிர்த்து மக்களின் நலனில் அக்கறை கொண்டு வீதி ஒழுங்குகளுக்கு ஏற்ப செயற்பட முன் வந்தால் விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

எனவே வாகனங்களின் சாரதிகளும் மற்றும் உரிய அதிகாரிகளும் இந்த விடயத்தில் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (203-25)



பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கென 'லீட்ஸ்' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 79 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் கே. கணேஸ் வீடு ஒன்றை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் 'லீட்ஸ்' நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் றொசான் மென்டிஸ் நிற்பதையும் முதலாவது படம் காட்டுகின்றது.

இரண்டாவது படத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் உரையாற்றுவதையும் சுனாமி மேலதிக அரச அதிபர் பா. செந்தில்நந்தனன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதைக் காணலாம். (படங்கள்: நேசன்).

# சுகாதார திணைக்கள நிறுவனங்களில் கடமை புரிவோருக்கு நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 30

தென்மராட்சிப் பிரதேச சுகாதார திணைக்கள நிறுவனங்களில் பணிபுரிவோருக்கான நடமாடும் சேவை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

யாழ்.பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

யாழ்.பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையிலான பிரிவுத் தலைவர்களும் பணிமனை கிளை பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்ட இந்த நடமாடும் சேவையில் பிரதேச சுகாதார திணைக்கள நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் , ஊழியர்கள் ஆகியோரின் பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. (203-207)

# நாட்டுச் சூழ்நிலை காரணமாக அழிந்து கொண்டிருக்கும் தமிழ் கலைகளை பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டும்

## இதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுவதாக அரச அதிபர் தெரிவிப்பு



நல்லூர், ஜூன்30

நாட்டுச் சூழல் காரணமாக அழிந்துகொண்டிருக்கும் எமது ஒட்டுமொத்த தமிழ்க் கலைகளையும் பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்கவேண்டும்.

இதற்கானபணியை எமது பிரதேச செயலகங்களூடாக முன்னெடுத்து வருகின்றோம்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பிரதேச செயலகத்தின் பிரதேச கலாசார பேரவையினரால் நடத்தப்பட்ட கலாசார விழா பிரதேச செயலர் ம. ஜெகூ தலைமையில் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அரங்கில் நேற்று முன்தினம நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.அரச அதிபர் தெரிவித்ததாவது:-

அனுபவமும் ஆற்றலும் மிக்க எமது கலைஞர்கள் இளங்கலைஞர்களுக்குக் காட்டும் வழி உன்னதமானது.

அவர்களூடாக எமது கலைகள் தொடர்ந்தும் பாதுகாக்கப்படுகிறது.

எமது கலைஞர்கள் குறித்த தகவல்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு கலைத் துறையையும் சேர்ந்த கலைஞர்களில் 400 கலைஞர்களின் விவரங்கள் பெறப்பட்டு அது நூலாக வெளியிடப்படவுள்ளது.

இதுபோன்ற முயற்சி இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

அந்தக் குறைபாட்டைக் களைந்து எமதுகலைஞர்கள், அவர்கள் மூலம் வளர்த்தெடுக்கப்பட்ட துறைகள் என்பவற்றை வெளிக்கொணர்வதன் மூலம் இளங் கலைஞர்களை மேலும் ஊக்குவிக்க ஏதுவாக இருக்கும்.

இன்று இடம்பெறும் இந்த விழாவின் மூலம் வளர்ந்துவரும் இளங்கலைஞர்களின் திறமைகளையும் அவர்களூடாக எதிர்காலத்தில் எமது கலைகள் அடையப்போகும் வளர்ச்சி குறித்தும் மக்கள் நன்கு தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

எமது கலைகளைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மூத்த கலைஞர்கள் இங்கு கௌரவிக்கப்படுவது இளங்கலைஞர்களின் கலைப்பயணம் மேலும் எழுச்சி பெற உந்து சக்தியாக விளங்கும்.

இறைவனால் அளிக்கப்பட்ட இந்தக் கலைகள் தமிழர்களின் பாரிய சொத்து.

அதனை நன்கு பேணிக்காத்து அதனூடாக எமது சமுதாயத்தின் உன்னதங் களை உலகுக்கு எடுத்துக் கூறுவோம்-என்றார் (203-111)

# மீசாலை வீரசிங்கம் ம.வியில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன்30

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய நிறுவனத்தினரால் பாலியல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இரு நாள்கள் நடத்தப்பட்டது.

நிறுவன செயற்றிட்ட அலுவலர் தே.யசோதரன், மந்துவில் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் இதில் கருத்துரைகளை வழங்கினர். (203-207)

# ஆயுள்வேத சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

கோப்பாய், ஜூன்30

வலி.கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட இலவச சித்த-ஆயுள்வேத மருந்தகங்களில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பல்வேறு நோய்களுக்குமான சித்த-ஆயுள்வேத மருந்துகள் பலவும் கொழும்பிலிருந்து பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. (202-72)

# காரைநகரில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன்30

காரைநகர் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி தடுப்பூசி, கருத்தடை ஊசி ஆகியனஇன்று திங்கட்கிழமை தொடக்கம் ஆறுதினங்கள் போடப்பட உள்ளதாக காரை நகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் ச. பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை பெரிய மணல் கடற்றொழிலாளர் கூ.சங்க மண்டபத்திலும், மு.பகல் 10.45 தொடக்கம் 12 மணிவரை சடையாளி சனசமூக நிலையதிலும் 12.45 தொடக்கம் 1.45 வரை ஜே/47 கிராம அலுவலர் அலுவலகத்திலும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை வேதரடைப்பு கி.அ.ச.மண்டபத்திலும் 10.45 தொடக்கம் 12 மணி வரை அல்வின் வீதி சந்தியிலும் 12.45 தொடக்கம் 1.45 வரை ஜே/46 கிராம அலுவலர் அலுவலகத்திலும் ஊசிகள் போடப்படவுள்ளன.

2 ஆம் திகதி காலை 9 தொடக்கம் 10.30 மணி வரை கல்லந்தாழ்வு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்திலும் 10.45 தொடக்கம் 12 மணி வரை கருங்காலி பிரதான வீதி சந்தியிலும், 12.45தொடக்கம் 1.45 வரை வியாவில் ஐயனார் கோவிலடியிலும் 3 ஆம் திகதி மருதபுரம், வேம்படி, தங்கோடை பகுதிகளுக்கும் 4 ஆம் திகதி ஊரி, பிட்டி யெல்லை, காளி கோவிலடிப் பகுதியிலும் 5 ஆம் திகதி திக்கரை, களபூமி, சுப்பிரமணியம் வீதி பகுதி களிலும் வளர்ப்பு நாய்க ளுக்கான தடுப்பூசியும், கருத் தடை ஊசி போடலும் இடம்பெற உள்ளது.

நாய் வளர்ப்போர் அனைவரும் தங்கள் நாய்களுக்கு தவறாது தடுப்பூசியும் கருத்தடை ஊசியும் போட்டுக் கொள்ளுமாறு பொதுச்சுகாதார பரிசோதகர் ச. பரமேஸ்வரன் கேட்டுள்ளார். (203-250)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்

நல்லூர், ஜூன் 30

யாழ்.பிரதேச செயலகத்தின் கலா சாரப் பேரவையின் கலாசார விழாவில் மூத்த கலைஞர்கள் எண்மர் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷினால் பொன்னாடை போர்த்து விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

பி.ஆனந்தராஜா-அண்ணாவியார், கங்காதரன் ஆச்சாரியார்-உலோகவேலை விற்பன்னர், ஆ.மரியதாஸ் - அண்ணாவியர், ஆ.கிறிஸ்ரியன்-சிற்பக்கலைஞர், எ.வரப்பிரகாசம் - நாட்டுக்கூத்து, மு. அருட்பிரகாசம்-அண் ணாவியார், தி.கிறிஸ்தோபர்-அண்ணாவியார், செல்வி விஜயலட்சுமி சண்முகராசா-வீணா வித்துவான்.

(203-111)


**எமது புதிய வெளியீடுகள்**

**தசாவதாரம் DVD (ஒறியினல்) 120/=**
**Hulk 2 DVD பச்சை மனிதன்**
**FLASH CD HOUSE**
**NO.1, ஆஸ்பத்திரி வீதி,**
*யாழ்ப்பாணம்.*
(75881)


### மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

**முதலாம் பரிசு - 531**
**2ஆம் பரிசு - 2372**
**3ஆம் பரிசு - 2375**

**ஆறுதல் பரிசில்கள்-**
**4014, 2286, 746, 273, 166, 3623, 1779, 0025, 3159, 1654**

மேற்படி வெற்றி இலக்கங்களுக்கு உரியவர்கள் 02.07.2008 புதன்கிழமை காரியாலயத்தில் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மானிப்பாய் பிரதான வீதி,
மானிப்பாய். (75882)



## குடத்தனை மடு அன்னை ஆலய திறப்பு விழாவும், திருவிழாவும்

### 02.07.2008 புதன்கிழமை

மணற்காட்டுப் பங்கின் குடத்தனை மருதங்கேணி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட மடு அன்னை ஆலயத்தின் திறப்பு விழாவும், திருவிழாவும் எதிர்வரும் 02.07.2008 புதன்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெறும். யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருள்திரு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களால் ஆலயம் திறந்து வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மடு அன்னையினுடைய பரிந்துரையினால்
இறையருள் பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

குறிப்பு: பருத்தித்துறை - அம்பன் பஸ் காலை 6.00 மணிக்கும் பருத்தித்துறை - பொற்பதி பஸ் காலை 6.30 மணிக்கும் சேவையில் ஈடுபடும்.

பங்கு மேய்ப்பு பணிசபை
பங்கு மக்கள், பங்குத்தந்தை- மணற்காடு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
06 - 06 - 1947



மறைவு
01 - 06 - 2008

அமரர்
## சம்பந்தர் கௌரிதாசன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்டிருந்து அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவருக்கு எமது இதய அஞ்சலியைச் சமர்ப்பிப்பதுடன் அன்னாரது மரணச்செய்தி அறிந்து எங்களுடன் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதிச்சடங்கில் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(30.06.2008) திங்கட்கிழமையும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகள் நாளை (01.07.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அமரரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதன் பின்னர் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்,
புத்தூர் மேற்கு, புத்தூர்.
தொ.பே.: 0773206627


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

997 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் **02 07 51 55**

**27-06-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 5783337 - 5798978

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 346,210 | 10/- | 3,462,100/- |
| 2 இலக்கங்கள் | 31,748 | 20/- | 634,960/- |
| 1 இல. + லக்கினம் | 31,475 | 30/- | 944,250/- |
| 2 இல. + லக்கினம் | 2,899 | 100/- | 289,900/- |
| 3 இலக்கங்கள் | 854 | 500/- | 427,000/- |
| 3 இல. + லக்கினம் | 78 | 5,000/- | 390,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,548,210/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 413,273 | | 7,048,210/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,773,050/-

தொடர் இலக்கம் 4897686 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூலை 01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 5788182-5-01 |
| காலி | 5795182-5-38 |
| மாத்தறை | 5798564-1-79 |
| மொனராகலை | 5789101-2-04 |
| களுத்துறை | 5789682-0-01 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## மரண அறிவித்தல்

### திருமதி இராசரெத்தினம் மனோன்மணி



வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், இல.44, சீனிவாசகம் வீதி, கொட்டடியைத் தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரெத்தினம் மனோன்மணி 28.06.2008 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரெத்தினம் (வர்த்தகர், அக்குரச) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மகாலெட்சுமி (லண்டன்) மற்றும் பரநிருபசிங்கம், அருந்தவநாதன் (ஆஸ்திரேலியா), உசாதேவி (ஆஸ்திரேலியா), யோகலெட்சுமி, ஜெயலெட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் குலவீரசிங்கம் (லண்டன்), செல்வராணி, யோகேஸ்வரி (ஆஸ்திரேலியா), செல்வராசா (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), மகேந்திரன், சயந்தகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியும் மோகன் - சிவகௌரி (லண்டன்), குலச்செல்வன் - ரேணுகா (லண்டன்), ஸ்ரீகௌரி - மகேஸ்வரன் (லண்டன்), ஜெயஸ்ரீ - பகீரதன் (லண்டன்), வாணிஸ்ரீ - சிவரஞ்சன் (லண்டன்), கார்த்திகா, இராஜதீபன் (பிரான்ஸ்), ராஜிகா, ஜலதீபன், சசிகரன் (ஆஸ்திரேலியா), தரன் (ஆஸ்திரேலியா), தரணி (ஆஸ்திரேலியா), கபிலன் (ஆஸ்திரேலியா), ரஜனி (ஆஸ்திரேலியா), டாக்டர் முகுந்தன் - வனிற்றா (ஆஸ்திரேலியா), குமணன் (ஆஸ்திரேலியா), நளினி (ஆஸ்திரேலியா), நிறஞ்சினி (ஆஸ்திரேலியா), அனுஷியா, குகாதரன் (இந்தியா), வக்சலா, வாகீசன், வேணுகா, பவித்திரா, ஜதுர்ஷிகா, வசீகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தபினா (லண்டன்), கரிஸ்மா (லண்டன்), ராகுல் (லண்டன்), வருண் (லண்டன்), மீனாட்சி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2008) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.44, சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
இ.பரநிருபசிங்கம் (மகன்).

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 . 06 . 1949



மறைவு
28 . 06 . 1992

## அமரர் மாசிலாமணி தேவநேரு

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
நினைவு மட்டும் எங்கள் மனதை
விட்டு அகலவில்லை.

செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

மனைவி,
பிள்ளைகள்.

(75383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடனும் அதிபர், ஆசிரியர்கள் விடா முயற்சியுடனும் சிறந்த பாதையை நோக்கி நகரும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்



பாடசாலை பழைய மாணவர்களின் ஒத்துழைப்பும், அதிபர், ஆசிரியர்களின் முயற்சியும் பாடசாலை சிறந்ததொரு பாதையை நோக்கி நகரச் செய்கின்றது என்றால் மிகையாகாது.

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் பின்தங்கிய ஒரு கிராமத்தில் இயங்கிவரும் பாடசாலையாகும்.

இப் பாடசாலை கடந்த இரண்டு வருட காலத்தில் பலமுன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் ஏனைய பாடசாலைகள் போன்று இப்பாடசாலையும் கல்வி அபிவிருத்தியில் முன்நோக்கி நகரத் தொடங்கியுள்ளது.

1951 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 11 ஆம் திகதி குருநாதி மூத்தர் என்பவரினால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை 1961 ஆம் ஆண்டு அரசின் கொள்கைக்கு ஏற்ப அரசினால் பொறுப்பேற்கப்பட்டு அரச பாடசாலையாக இயங்கி வருகின்றது.

பாடசாலையின் அதிபராகத் தற்போது கடமையாற்றும் முத்துத்தம்பி செல்வஸ்தான் 2007 ஆம் ஆண்டு பங்குனி மாதம் இந்தப் பாடசாலை அதிபராகக் கடமையேற்றார்.

கடந்த ஏழு வருட கால இடைவெளியின் பின்னர் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வி.கஜன்சிகா என்ற மாணவி 162 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

தரம் 6 இல் அயல் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர் ஒருவரும் அனுமதி பெற்று பாடசாலையில் கற்று வருகிறார்.

இங்கு தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் 462 மாணவ மாணவிகள் கற்கின்றார்கள். 23 ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள்.

கல்விக் கோட்டமும் கல்வி வலயமும் பாடசாலை அமைந்துள்ள சூழ்நிலை, கல்வியின் தேவை, ஆசிரியர்களின் தேவை ஆகியவற்றை உணர்ந்து அவற்றைப் பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை கிராமப்புறத்தில் அமைந்துள்ளது. இந்நிலையில் பெற்றோர்களிடம் கல்வி சம்பந்தமான விழிப்புணர்வு மிகவும் குறைவாகக் காணப்படுகின்றமையால் மாணவர்களின் கல்வியை பாதிக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இந்த ஆண்டு தரம் 5 இல் 53 மாணவ, மாணவிகள் கற்கின்றார்கள். புலமைப் பரிசில் பரீட்சைக்கு இதில் 28 மாணவர்களே இந்த ஆண்டு தோற்றுகிறார்கள்.

ஏனைய 25 மாணவர்களும் வயது கூடிய மாணவர்களாக காணப்படுகின்றார்கள்.

இதற்கு காரணம் பிள்ளைகளை உரிய வயதில் பாடசாலைக்கு அனுப்பாது வைத்திருந்தமையே ஆகும்.

இதே போன்று பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ் பெற்றுத் தருவதிலும் கூட அசிரத்தையான தன்மையே காணப்படுகின்றது.

பாடசாலைச் சுற்றாடலில் உள்ள பிள்ளைகளுடன் அயல்பகுதிகளில் இருந்தும் ஒரு சில பிள்ளைகள் வருகின்றார்கள்.




பாடசாலையில் சுற்றாடல் பிள்ளைகள் 95 வீதத்திற்கு மேல் கற்று வருகின்றார்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நல்ல முறையில் இயங்குவதுடன் வேண்டிய ஒத்துழைப்பை தமது வசதிக்கு ஏற்ப செய்து வருகின் றார்கள்.

பொருளாதார ரீதியாக மட்டுப் படுத்தப் பட்டவர் களாக காணப்பட்டா லும் கூட பாடசாலை வளர்ச்சிக்கு தமது இயலுமான பொருளாதார, உடல் ரீதியான பங்களிப்பை வழங் குகின்றார்கள்.

பழைய மாண வர்களை பொறுத்த வரையில் பாடசாலையின் வளர்ச்சியில் முழு மையான பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். பழைய மாணவர் சங்கம் இங்கு இயங்குவதுடன் கிளை லண் டனிலும் இயங்கி வருகின்றது.


ஆங்கிலதினப் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற சுபாஸ்காந்தன் நிலுக்கி

அண்மையில் பழைய மாணவர்களையும் பாடசாலை சுற்றாடலைக் கொண்ட ஞான முருகன் விளையாட்டுக் கழகம் சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் விளையாட்டு மைதானத்தை திருத்தித் தந்துள்ளனர் என்று அதிபர் பெருமிதம் அடைகிறார்.

இதே போன்று கடந்த ஆண்டு பாடசாலை மாணவர்கள் கற்பதற்காக 40X20 அடி கட்டடம் ஒன்றை லண்டன் பழைய மாணவர்களால் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கூட ஆரம்பக்கல்வி மாணவர்களுக்காக சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் சிறுவர் நிலா முற்றம் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

அடுத்த கட்டமாக 40 X25 அடியில் ஒரு மாடிக் கட்டடம் அமைத்து கணனி அறை, நூலகம் அமைக்க உரிய ஏற்பாடுகளை செய்து தருவதாகவும் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினர் உறுதி கூறியுள்ளதாக அதிபர் கூறினார்.

பாடசாலையில் கடந்த காலத்தில் விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லாத குறைபாட்டை உடுவில் கல்விக் கோட்டமும், வலிகாமம் கல்வி வலயமும் இணைந்து நிவர்த்தி செய்துள்ளன.

கல்வித் திணைக்களத்தின் நிதி உதவி மூலம் 28 லட்சம் ரூபா செலவில் 40X25 அடியில் விஞ்ஞான ஆய்வு கூடக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.




பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுடன் ஏனைய புறச் செயல்பாடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ சாதாரணத்தில் 5 மாணவர்கள் முழுமையான சித் தியடைந்துள்ளனர்.

இந்த ஆண்டும் கூட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிலும் ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிலும் கடந்த ஆண்டை விட கூடிய பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் அதிபரும், ஆசிரியர்களும் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

தமிழ்த்தினப் போட்டிகளில் என்றும் இல்லாதவாறு இந்த ஆண்டு 6முதலாம் இடங்களையும் இரண்டு இரண்டாம் இடங்களையும் ஒரு மூன்றாம் இடத்தையும் மாணவர்கள் பெற்றுள்ளார்கள்.

**பவித்திரன்**

வலய மட்டம் போட்டிக்குச் சென்ற ஆறு மாணவர்களில் நான்குபேர் இரண்டாம் இடங்களையும் ஒருவர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

அடுத்த ஆண்டுகளில் தமிழ்த் தினப் போட்டிகளில் மாவட்ட மட்டப் பெறுபேறுகளை எட்டுவார்கள் என்ற நம்பிக்கையும் உறுதியும் அதிபர், ஆசிரியர்களிடத்தில் காணப்படுகின்றது.

ஆங்கில தினப்போட்டியிலும் கூட இந்தாண்டு கோட்ட மட்டத்தில் ஒரு முதலாம் இடம் கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் குழு நிலைப் போட்டிகளில் இரண்டு 3ஆம் இடங்களையும் பெற்றுள்ளார்கள்.

விளையாட்டு மைதான வசதி உண்டு. உதைபந்தாட்டப் போட்டியில் 16, 18 வயதுப்பிரிவில் கடந்தாண்டு உடுவில் கல்விக் கோட்டம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் 18 வயதுப் பிரிவினர் வலய மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

இந்த ஆண்டு கோட்ட மட்டத்தில் மென் பந்து கிரிக்கெட் போட்டியில் கோட்ட மட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் வலய மட்டத்தில் அரையிறுதி வரை முன்னேறியுள்ளார்கள்.

இந்த ஆண்டு முதல் தடவையாக பெண்களுக்கான கரப்பந்தாட்ட அணி உருவாக்கப்பட்டுள்ளது. 15 வயதுப் பெண்கள் கரப் பந்தாட்டஅணி கோட்ட மட்டத்தில் 3ஆம் இடத்தையும் 17 வயதுப் பெண்கள் அணி கோட்ட சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

17 வயது ஆண்கள் கோட்டமட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றார்கள். வலய மட்டத்தில் இந்த இரண்டு அணிகளும் கலந்து கொள்வதுடன் காலிறுதி வரை முன்னேறிச் சென்றுள்ளார்கள்.

வசதிகள் குறைவாக உள்ள போதிலும் இருக்கும் வளங்களைக் கொண்டு பாடசாலை இயங்கி வருகின்றது என்று தெரிவிக்கும் பாடசாலை அதிபர் மாணவர்களின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கு உதவ அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றும் கூறியுள்ளார். ✱

# மாணவர்களுக்கு வழி காட்டுவதற்கு— ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய நடத்தை முறைகள்

இக்கட்டுரையின் முதலாவது பகுதி கடந்த வெள்ளிக்கிழமை 'உதயன்' கல்விப் புனல் பகுதியில் வெளியாகியிருந்தது. இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது.

✱ அறவொழுக்கம், விழுமியங்கள், கலாசாரங்கள் தொடர்பான மனப்பாங்குகள்.

இவற்றினூடாக தம்மை வளர்த்து மாணவர்களுடைய தேவைகளையும், விருப்பங்களையும் உணர்ந்து, கல்விச் செயற்பாடுகளைக் கட்டியெழுப்ப வேண்டும். மாணவர்களின் உணர்வுகளுக்கு ஏற்ப நெகிழ்ச்சித் தன்மையும் தேவைப்படுகின்றது. மாணவர்களின் உடல் - உள்ளம் - இயக்கம் - பாடசாலை, வீடு, சமூகம் முதலியவற்றுக்கிடையே இணக்கத்தையும் ஒன்றிணைப்பையும் வலுப்படுத்தி வழிகாட்ட ஆசிரியர்கள் பின்வரும் மாணவர்கள் சார்பான நடத்தைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

1. மாணவர்களுக்குப் பாடம் விளங்கவில்லை என்றால் அதனைக் கருதாது, கோபம் கொள்ளாது, தண்டனை வழங்காது மாணவர்களின் தளத்தில் நின்று பிரச்சினையினை அணுகுதல்.

2. தோல்விகளையும், சவால்களையும் வெற்றிகளாக மாற்றும் திறனை மாணவரிடத்து ஊக்குவித்தல்.

3. பரிகாரக் கற்பித்தற் செயன்முறைகளை வளம்படுத்தல், மாணவர்களின் ஈடுபாட்டையும் பங்குபற்றுதலையும் கற்றலில் உறுதிப்படுத்தல்.

4.என்றுமே வெற்றிகளை அனுபவிக்காத மாணவர்களுக்கு யாதாயினும் வெற்றிகளை அனுபவிக்கச் செய்தல். கற்றல் இடமாற்றம், அனுபவ இடமாற்றம் ஏற்பட மகிழ்ச்சிகரமாகக் கற்றல்.

5.மாணவர் மன நலத்தை வளப்படுத்தும் நேர்க்கவி நிலைகளை (Positive Climate) முனைப்பாக்கல். அதனூடாக நல்ல ஒழுக்கங்களை நோக்கிய சுய நெறிப்படுத்தலை மாணவரிடையே வளர்த்தல்.

மாணவர்கள் தமக்குச் சிக்கலான பிரச்சினைகள் ஏற்படுகின்ற பொழுது அதைத் தீர்க்க அனுபவமுள்ள ஆசிரியர்களின் ஆலோசனையைப் பெறுவது நல்லது. மேலும் நல்ல நூல்களை வாசிக்கலாம். தலை சிறந்த தலைவர்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளலாம். தாம் எந்தத் துறையிற் பிரகாசிக்க விரும்புகிறார்களோ அந்தத் துறையிற் சிறப்பிடம் பெற்றவர்களிடம் ஆலோசனைகள் பெறுவதும் சிறந்தது. எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வு காண விளையும் பொழுது நமக்குத் தெரிந்த விவரங்களின் அடிப்படையில் விவரங்களை மேற்கொள்ள விழைவதால் நாம் ஒரு வட்டத்திற்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருகின்றோம். எனவே அதிலிருந்து விடுபட்டு அது பற்றிய அனுபவமும் முழு மையும் தெரிந்தவரிடம் ஆலோசனை பெறுதல் பெரும் நன்[illegible] காலத் தொழில் [illegible] தொடர்பாக இவ்வாறு ஆலோசனை பெறுதல் நல்ல பயன் ளிக்கும்.


பா.தனபாலன்
உப பீடாதிபதி
(கல்வி)
யாழ்.தேசிய
கல்வியியற் கல்லூரி

**மாணர்களுக்கான தொழில் வழி காட்டல்**

எமது நாட்டுப் பாடசாலைகளின் இடை நிலைக்கல்வி, உயர்கல்வி மாணவர்களை அவர்களின் எதிர்காலத் தொழில் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது இன்றைய கல்வியின் போக்காகவுள்ளது. அவர்கள் தமக்குப் பொருத்தமான தொழில் முறைகளை இனங் கண்டு, அதற்கேற்பப் பாடநெறிகளைத் தெரிவு செய்து, தொழிலைப் பெற்று முன்னேற்றம் அடைவ தற்கு உதவி வழங்குதல் தொழில் வழி காட்டலாகும். இதனைச் சர்வதேச தொழில் நிறுவனம் "ஒருவர் தனக்குப் பொருத்தமான தொழிலைத் தன்ஆர்வம், ஆற்றல், உளச்சார்பு ஆகிய பண்புகளினதும், தொழி லைப் பெறக்கூடிய வாய்ப்பின் அடிப்படையிலும் தெரிவு செய்து; அதனைப் பெற்றுத் தொழில் வாழ்க்கையில் முன்னேற வழங்கப்படும் உதவியே தொழிலுக்கு ஆற்றுப் படுத்தலாகும்" என்கிறது.

ஒருவர் தன்னையறிதல் ஊடாகவும், சமூக, தனிமனித காரணிகள் ஊடாகவும் இடைவினை கொள்வதன் வாயிலாக அவருக்குத் தொழில் பற்றிய சுய உணர்வு வளர்கின்றது. இதனடிப்படையில் தொழில் தெரிவு பற்றிய அறிவு வளர்கின்றது. இது தொடர்பாகத் தொழிற் பகுப்பாய்வு விடய அறிவை ஆசிரியர்கள் மாணவர்களிடையே வழங்க வேண்டும். பொருத்தமான தொழில் நாடியைப் பொருத்தமான தொழிலுக்கு அழைத்துச் செல்ல இது வழிவகுக்கும்.

மேலும் தொழில்கள் தொர்பான தரவுகளைப் பாடசாலைகளிற் சேகரித்தல், பத்திரிகை, [illegible] அறிவித்தல்களை, மாணவர்கள் வாசிக்கக்கூடிய வகையில் இடல், தொழில் தொடர்பான தொழில் திணைக்கத்துடன் இணைந்து செயலமர்வுகளை நடத்துதல். மாணவர்களைத் தொழிற்சாலைகளுக்கு அழைத்துச் செல் லுதல் மிகுந்த பயன்களைத் தரும். கின்ஸ் பேர்க்கின், சவ்பர் ஆகிய தொழில் வழி காட்டல் நிபுணர்கள் ஒருவர் பிறப்பிலிருந்து தொழில் பெற்று ஓய்வு பெறும் வரையுள்ள ஐந்து பிரதான வளர்ச்சிப் பருவங்களை இனம் காட்டினார்; அவை:

1. சிறு குழந்தை நிலையிலிருந்து கற்பனை, உளநாட்டம், ஆற்றல் பெறல் என்பவற்றோடு வளர்ச்சிபெறும் பருவம்.

2. தொழில்கள் பற்றிய கண்டுபிடிப்பு, உசாவல் நிரம்பிய பருவம்.

3. தொழில்களைப் பெறும் பருவம்

4. தொழில்களை நிலை நிறுத்தும் பருவம்.

5. தொழில்களில் இருந்து ஓய்வு பெறும் பருவம்.

இவற்றினை மாணவர்களுக்கு அறியப் படுத்தித் தொழில் தெரிவில் ஒவ்வொரு மாணவரும் தாம் சார்ந்த சுயமதிப்பீடு என்பதுடன் குடும்ப, பொருளாதார, சமூகம், நண்பர்கள், பாடசாலை என்பவற்றின் செல்வாக்கும் தொழில் தெரிவில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. ஒவ்வொரு மாணவரும் தம் எதிர்கால தொழில் இலக்கை அடையக்கூடிய கல்வி வழி காட்டல் சேவை ஆசிரியர்களே சரியாக வழங்க முடியும். இதற்கான சிறந்த களங்களாகப் பாடசாலைகளை ஏற்படுத்தப் பல புதிய செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டி இருக் கின்றது. இன்று ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒவ்வொரு வழிகாட்டற் சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள. இவற்றிற்கு உயிர் கொடுத்து எம் எதிர்காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்களுக்கு நல்வழி காட்டு வோமாக.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு கணக்கு வைத்திருக்கும் சிறுவர்கள் ரூபா 30 இலட்சம் வரை வென்றுள்ளார்கள்












தமது பிள்ளைகளை கல்வியில் முன்னேற்றுவதற்காக,"பரீட்சைகளில் சித்தியடையும் சிறுவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்குவதாக" பல பெற்றோர் வாக்களிக்கின்றனர். அவ்வாறு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, பெறுமதிமிக்க சிறந்த பரிசுகள் வழங்குவதாக வாக்களிக்கும் சாதாரண மக்களின் பிள்ளைகளையும் கல்வியில் முன்னேற்றுவதற்கு மிகவும் பலம் வாய்ந்த உள்நாட்டு நிதி நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது. திறமையான மாணவர்களையும் தோல்வியடைந்தவர்களாக மாற்றும் லொத்தர் முறைகளில் இருந்து விலகி, சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களுக்கும் வெற்றிக் களிப்பை அடைந்து கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் "குளோபல் பினான்ஸ்" மூலம் தொடர்ச்சியாக 10 வருடங்கள் "இலங்கையின் மிகச்சிறந்த வங்கி" என்ற விருதைப் பெற்ற கொமர்ஷல் வங்கியே அந்த வாய்ப்பினை வழங்கும் நிறுவனமாகும்.

அருணலு கணக்கு வைப்பாளர்களில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கும் திட்டத்தை கொமர்ஷல் வங்கி 1998 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 164 மாணவர்களுக்கு ரூபா 1,350,000 வும், 2006 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 170 மாணவர்களுக்கு ரூபா 1,400,000 ரூபாவும் வழங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு கணக்கு வைப்பாளர்களில் 353 மாணவர்கள் கொமர்ஷல் வங்கியின் அதிகூடிய பரிசுத் தொகையாக 3,014,500 ரூபாவை இவ்வாண்டில் பெற்றுள்ளனர்.

சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அருணலு கணக்கு வைத்திருக்கும் மாணவர்களின் கணக்கில் குறைந்தபட்சம் ரூபா 5,000 இருப்பின் அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் முறையே முதலாமிடத்திற்கு 10,000 ரூபாவும், இரண்டாம் இடத்திற்கு 7,500 ரூபாவும், மூன்றாமிடத்திற்கு 5,000 ரூபாவும் வழங்கப்படும். அத்துடன், 2007 ஆம் ஆண்டு முதல் வெற்றி பெற்ற எந்தவொரு மாணவரும் தனது மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றிருப்பின், அவரின் அருணலு கணக்கின் மிகுதி இரட்டிப்பாக்கப்படும். இந்த வாய்ப்பை கடந்த வருடம் நான்கு மாணவர்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கல்வியின் முக்கியத்துவத்தை அழுத்தமாக எடுத்துக்கூறும் ஒரு நிறுவனமாக உபசரணைப் பங்களிப்பைச் செய்வதையிட்டு கொமர்ஷல் வங்கி பெருமையடைகிறது என வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் (திட்டம் செயற்படுத்துகை) திரு. றிச்சர்ட் ரொட்ரிகோ குறிப்பிடுகிறார். பிள்ளைகளின் கல்வி ஆற்றலை விருத்தி செய்வதும், சேமிப்புப் பழக்கவழக்கத்திற்கு வழிவகுப்பதும் அருணலு சேமிப்புக் கணக்கின் முக்கிய நோக்கம் என்பதனால், பெற்றோருக்கும் மகிழ்ச்சி தருகிறது என்றும், அருணலு பிரபலமானதற்கு உறுதுணையாக உள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். அருணலு கணக்கை நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சுப்பர் மார்க்கட் வங்கிச் சேவை நிலையங்களிலும் ரூபா 100/- வைப்புச் செய்வதன் மூலம் ஆரம்பிக்க முடியும்.

அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) மாதிரிப் பரீட்சை - 2008 ஓகஸ்ட்

General Certificate of Education (Adv.Level) - August 2008 Model Question paper

02 | T | I

# இரசாயனவியல் பகுதி - I

2மணி / 2hours

1. மூலகம் Y இன் ஒரு ஒட்சியனின் சூத்திரம் $YO_4^-$ எனின் Y இன் வலுவளவு இலத்திரனிலையமைப்பு
   (i) $s^2$ (ii) $d^5s^1$ (iii) $d^5s^2$ (iv) $s^2p^4$ (v) $s^2p^3$

2. ஏனையவற்றிலிருந்து வேறுபட்ட கேத்திர கணித வடிவமுடைய மூலக்கூறு / அயன்
   (i) $CS_2$ (ii) $NO_2^+$ (iii) $XeF_2$ (iv) $NO_2$ (v) $I_3^-$

3. $N_2O_4(g) \rightleftharpoons 2NO_2(g)$
   $7^0C$ யில் ஒரு விறைப்பான பாத்திரத்தில் $N_2O_4(g)$ மட்டும் உண்டு.இவ்வெப்பநிலையில் பிரிகை நடைபெறவில்லை. பின்பு வெப்பநிலை $47^0C$ க்கு உயர்த்தி மேற்குறிப்பிட்ட சமநிலை பேணப்பட்டபோது $7^0C$ யில் உள்ள அமுக்கத்தின் 40% ஆல் சமநிலை அமுக்கம் கூடியிருந்தது. எனின் $47^0C$ யில் கூட்டப்பிரிகை % யாதாகும்? சமநிலையில் வாயுக்கள் இலட்சிய நடத்தை எனக் கொள்க.
   (i) 30% (ii) 22.5% (iii) 20% (iv) 50% (v) தகுந்த விடை தரப்படவில்லை

4. திணிவுப்படி 33.33% $PH_3(g)$ உம் 66.67% $NH_3$ உம் கொண்ட ஒரு வாயுக்கலவையின் அடர்த்தி $0.2gcm^{-3}$. இக்கலவை மிகை $O_2$ இல் முற்றாகத் தகனமாக்கப்பட்டது.
   (P=31, H=1, N=14)
   $2O_2(g) + PH_3(g) \rightarrow H_3PO_4(l)$ $4NH_3(g) + 3O_2(g) \rightarrow 2N_2(g) + 6H_2O(l)$
   இக்கலவையில் 100g இன் முற்றான தகனத்திற்கு தேவையான வளியின் கனவளவு யாது? (வளியில் $O_2(g)$ இன் கனவளவு % = 20)
   (i) $11.2dm^3$ (ii) $5.6dm^3$ (iii) $2.8dm^3$ (iv) $22.4dm^3$ (v) $2dm^3$

5. திணிவுப்படி 36.5% HCl இனை உடையதும் மூலர்த்திறன் $8.33 mol\ dm^{-3}$ செறிவும் உடைய கரைசலின் அடர்த்தி $(kgm^{-3})$
   (i) 0.36 (ii) 833 (iii) 8.33 (iv) 3.6 (v) 1.20

6. $N_2O(g)$ இன் ஏற்றுக் கொள்ளக்கூடிய கட்டமைப்பு
   (a) $:N \equiv \overset{+}{N} - \overset{-}{\underset{..}{\ddot{O}}}:$ (b) $:\overset{-}{\underset{..}{N}} = \overset{+}{N} = \ddot{O}:$ (c) $:N = N:$ with $\ddot{O}$ bridging (d) $:\overset{-}{\underset{..}{N}} = \overset{2+}{O} = \overset{-}{\underset{..}{N}}:$
   (i) a மட்டும் (ii) b மட்டும் (iii) a,b இற்கு இடையிலான அமைப்பு
   (iv) a,b,c இற்கு இடையிலான அமைப்பு (v) a,b,c,d நான்கிற்கும் இடையிலான பரிவு அமைப்பு

7. ஐதரசன் நிறமாலை பற்றிய கூற்றுக்களில் <u>தவறானது</u>
   (i) n = α இலிலிருந்து n = 1 இற்கு $e^{\underline{n}}$ பாய்வதைக் குறிக்கும் கதிர்ப்பின் சக்தி மூலம் ஐதரசனின் அயனாக்கச் சக்தியைக் கணிக்கலாம்
   (ii) ஒவ்வொரு கோடும் ஒரு வரையறுத்த சக்திமட்டத்தைக் குறிக்கும்
   (iii) உறிஞ்சல் நிறமாலையில் குறித்த கறுப்புக் கோடுகள் காணப்படும்.
   (iv) பாசன் தொடர் வெளியோட்டிலிருந்து 3 ம் ஓட்டிற்கு $e^{\underline{n}}$ பாயும் போது ஏற்படும் சக்திக் கதிர்ப்புகளைக் குறிக்கும்.
   (v) ஒவ்வொரு கோடும் நுண்ணிய உட்பிரிவுகளைக் கொண்டது.

8. 3d - தொடர் மூலகங்களிற்கு உண்மையற்ற கூற்று
   (i) அதியுயர் சோடியற்ற இலத்திரன்களை உடையது Cr
   (ii) ஆகக் குறைந்த உருகுநிலை உடையது Zn
   (iii) Sc உம் Zn உம் தாண்டல் இயல்புகளை பெருமளவில் காட்டுவதில்லை
   (iv) Sc ஈரியல்புகளைக் காட்டுவதில்லை
   (v) அதியுயர் ஒட்சியேற்றுநிலையைக் காட்டுவது Mn

9. KI நீர்க்கரைசலுடன் அவதானிக்கத்தகு மாற்றம் எதனையும் <u>காட்டாத</u> கரைசல்.
   (i) NaClO (ii) $FeCl_3$ (iii) $CuSO_4$ (iv) $SnCl_2$ (v) $Cl_2$ நீர்

10. $0.6moldm^{-3}$ அயன் (III) நைத்திரேற்று கரைசலும் $0.6moldm^{-3}$ கொப்பர் (II) சல்பேற்றுக் கரைசலும் சமஅளவு கலக்கப்பட்டன. இது பற்றிய கூற்றுகளில் தவறானது.(இங்கு நீரின் அயனாக்கம் புறக்கணிக்கத்தக்கது.)
    (i) கரைசலில் கொப்பர் (II) அயன் செறிவு $0.30moldm^{-3}$
    (ii) கரைசலில் நைத்திரேற்று அயன் செறிவு $0.6moldm^{-3}$
    (iii) கரைசலில் சல்பேற்று அயன் செறிவு $0.30moldm^{-3}$
    (iv) கரைசலில் நேர் அயன் செறிவு $0.6moldm^{-3}$
    (v) கரைசலில் அனயன் செறிவு $1.2moldm^{-3}$

11. உப்புக்கள் A,B,C க்கு தனித்தனி செய்யப்பட்ட ஒரு சோதனையின் விபரங்கள் கீழேயுண்டு

| | A | B | C |
|---|---|---|---|
| I dil HCl | மாற்றமில்லை | மாற்றமில்லை | வெள்ளை |
| II பகுதி I இன் வடிதிரவத்திறகு $H_2S(g)$சேர்த்தல் | மஞ்சள் வீழ்படிவு conc. HCl இல் கரைந்தது | மாற்றமில்லை | கறுப்பு |
| III பகுதி II இன் வடிதிரவம் கொதித்தல் பின் $HNO_3(aq)$ பின் கொதித்தல் பின் $NH_4Cl_2(aq)/NH_3(aq)$ | மாற்றமில்லை | பச்சை வீழ்படிவு | மாற்றமில்லை |

எனில் A,B,C யிலுள்ள கற்றயன்களாக அமையப் பொருத்தமானவை முறையே
   (i) $Cd^{2+}, Ni^{2+}, Cu^{2+}$ (ii) $Cd^{2+}, Cr^{3+}, Cu^{2+}$ (iii) $As^{3+}, Cr^{3+}, Pb^{2+}$
   (iv) $Sb^{3+}, Fe^{2+}, Pb^{2+}$ (v) $Sn^{4+}, Cr^{3+}, Ag^+$

12. $H_2S(g)$ உடன் குறிப்பிடத்தகு மாற்றம் எதனையும் <u>காட்டாத</u> கரைசல்
    (i) $FeCl_3(aq)$ (ii) $SO_2(aq)$ (iii) $AgNO_3(aq)$ (iv) $CuSO_4(aq)$ (v) $BaCl_2(aq)$

13. குடிநீர் மாதிரியொன்று உலோக அயன் ஒன்றினால் மாசுப்படுத்தப்பட்டுள்ளது. நீருக்கு NaOH(aq) சேர்த்தபோது நீலநிற வீழ்படிவு தோன்றியது.இவ்வீழ்படிவு மிகை $NH_3(aq)$ இல் கரைந்து மஞ்சள் கபிலக் கரைசலைத் தந்தது. அமிலமாக்கப்பட்ட நீர் மாதிரிக்கு $H_2S$ செலுத்த குறிப்பிடத்தகு மாற்றம் இல்லை. எனின் அவ்வுலோக அயன்
    (i) $Co^{2+}$ (ii) $Cu^{2+}$ (iii) $Cr^{3+}$ (iv) $Ni^{2+}$ (v) $Fe^{3+}$

14. பின்வருவனவற்றில் எது ஏனையவற்றிலிருந்து வேறுபட்ட வகைக்குரிய பல்பகுதியம்
    (i) பொலிஸ்ரறீன் (ii) P.T.F.E (iii) பொலி அமைட்டு
    (iv) பொலித்தீன் (v) பொலிவைனைல் குளோரைட்டு


15. கறுவா மரமொன்று வேருடன் முற்றாகப் பிடுங்கப்பட்டு சாற்றுத்தைல தயாரிப்பிற்கு உட்படுத்தப்பட்டது. இங்கு பெறப்பட்ட தைலத்தில் <u>அமையமுடியாது</u> என எதிர்பார்க்கக்கூடிய தொழிற்படு கூட்டம் / பகுதி
    (i) $>C=C<$ (ii) $-C(=O)H$ (iii) $-OH$ (iv) $>C=O$ (v) $-C(=O)OH$

16. $CH_4(g) \rightarrow C(g) + 4H(g)\ \Delta H^{\ominus} = 1660kJmol^{-1}$ இதிலிருந்து திட்டமாக கூறமுடியாத தகவல்
    (i) C - H பிணைப்புகள் ஒவ்வொன்றினதும் பிரிகை வெப்பவுள்ளுறை $415kJmol^{-1}$
    (ii) $CH_4(g)$ இன் கூட்டப்பிரிகை வெப்பவுள்ளுறை $1660kJmol^{-1}$
    (iii) தாக்கத்தின் ஆரம்பத்தில் $CH_4(g)$ உம் தாக்கமுடிவில் C(g)உம்H(g) உம் நியம நிபந்தனையில் அமையும்.
    (iv) இப்பிரிகையை மேற்கொள்ள சக்தி வழங்கப்பட வேண்டும்
    (v) இத்தாக்கத்தின் $\Delta H^{\ominus}$ ஐ பரிசோதனை மூலம் நேரடியாகக் கணிக்க முடியாது

17. HCl(aq),$H_2SO_4$(aq),NaOH(aq) உடன் தனித்தனி வீழ்படிவைக் கொடுக்கக்கூடிய ஒரு சேர்வை R ஆகும். R இனை வெப்பமேற்றும்போது நிறமற்ற வாயு வெளியேற்றத்துடன் உலோக மீதியும் எஞ்சியது. எனின R ஆனது
    (i) $Pb(NO_3)_2$ (ii) $Hg(NO_3)_2$ (iii) $Ag_2CO_3$ (iv) $Cu(NO_3)$ (v) $Cr(NO_3)_3$


18. NaOCl(aq) உடன் NaI(aq) இனை சேர்க்கும்போது உண்மையான கூற்று
    (i) ICl உருவாகும் (ii) $Cl_2$ விடுவிக்கப்படும் (iii) குளோரின் தாழ்த்தப்படும்.
    (iv) அயடின் தாழ்த்தப்படும். (v) குறிப்பிடத்தகு தாக்கம் எதுவும் நடைபெறாது


19. நீருடன் தாக்கமுற்று இரு அமிலங்களின் கலவையைக் கொடுப்பது.
    (i) $Cl_2O$ (ii) $P_2O_3$ (iii) $N_2O_4$ (iv) $N_2O_3$ (v) $Cl_2O_7$

20. 



இங்கு இவ்வுபகரண அமைப்புக்குரிய தொகுதி பற்றிய கூற்றுக்களில் <u>தவறானது</u>.
    (i) Zn அனோட்டாத் தொழிற்படும்
    (ii) Cu கோலில் ஒட்சிசன் வெளிப்படும்
    (iii) வெளிச்சுற்றில் ஒரு மின்னோட்டம் Cu இலிருந்து Zn க்கு பாயும்
    (iv) கரைசலின் pH நேரத்துடன் குறையும்.
    (v) Zn எதிர்முனைவாகத் தொழிற்படும்

21. $Cl-\overset{O}{\overset{\|}{C}}-CH_2-\overset{CHO}{\overset{|}{C}}=CH-CH_2CN$ இன் IUPAC பெயர்
    (i) 3 - formyl - 6 - nitrile - 3 - heptenoyl chloride
    (ii) 5 - cyano - 3 - formyl - 3 - pentenoyl chloride
    (iii) 1 - cyano - 4 - formyl - 6 - hept - 4 - en
    (iv) 5 - carboxychloro - 4 - formyl - 3 - pentenenitrile
    (v) தகுந்த விடை தரப்படவில்லை

25. பின்வரும் ஒருபடி மாற்றீடுகளில் தவறானது
    (i) 

    (ii) $C_6H_5CONH_2 \xrightarrow[\Delta]{NaOH/CaO} C_6H_6$
    (iii) $CH_2.CH_2C\ CH \xrightarrow{Hg^{2+}/dilH_2SO_4} CH_2CH_2COCH_3$
    (iv) $CH_3-\overset{O}{\overset{|}{C}}-CH=CH_2 \xrightarrow{LiAlH_4} CH_3-\overset{OH}{\overset{|}{CH}}-CH_2-CH_3$
    (v) 


26. சேதன இரசாயன பொறிமுறைகள் பற்றிய உமது அறிவின் அடிப்படையில் பின்வரும் வினாவுக்கு விடை தருக.
    $2CH_3CHO \xrightarrow{dil\ H_2SO_4} CH_3CH(OH).CH_2CHO$ எனும் தாக்கத்தில்
    (a) $OH^-$ அயன்கள் ஊக்கியாக தொழிற்படும்
    (b) $>C=O$ கூட்டத்தில் தாக்கும் இனம் : $CH_2CHO$
    (c) $>C=O$ ஆனது முதலில் $>\overset{OH}{\overset{|}{C}}\ \oplus$ ஆக மாறி தாக்கம் தொடரும்
    (d) இது கருநாட்ட ஒடுக்கல் தாக்கம்.
    இவற்றில் சரியானது / சரியானவை
    (i) a , b மட்டும் (ii) a,b,c மூன்றும் (iii) a,b,d மட்டும்.
    (iv) a மட்டும் (v) a , c , d மூன்றும் மட்டும்

27. 


பென்சீனின் ஒரேயொரு பிரதியீட்டுகூட்டமுடைய சேர்வை A யிலிருந்து B,C ஆகிய இரு விளைவுகட்கூடாக தரப்பட்ட சேர்வை தயாரிக்கப்படும். எனில் A யாக அமையப்பொருத்தமானது.
    (i) $C_6H_5OH$ (ii) $C_6H_5CH_3$ (iii) $C_6H_5I$ (iv) $C_6H_3Br_2$ (v) $C_6H_5NH_2$

28. சேதனச்சேர்வை R ஆனது மூ.கூ. சூத்திரம் $C_6H_{10}O_3$ உடையது. இது
    (a) Na உடன் $H_2$ ஐ வெளியேற்றியது
    (b) இது $AgNO_3/NH_3$ உடன் வெள்ளியாடியைக் கொடுத்தது
    (c) ஐதான NaOH(aq) உடன் தாக்கமற்றது
    (d) R இனை $K_2Cr_2O_7/H^+$ உடன் வெப்பமேற்றி பெற்ற விளைவும் 2 , 4 - D.N.P. -H உடன் மஞ்சள் வீழ்படிவை தந்தது
    (e) R ஆனது ஒளியுயிர்ப்புடையது
    சேதனச்சேர்வை R ஆக இருக்கக்கூடியது...
    (i) $CH_3.CO.CH(OH).CH_2CH_2CHO$
    (ii) $HO_2C-\overset{CHO}{\underset{CH_3}{C}}-CH_2CH_3$
    (iii) $CH_3-\underset{CHO}{CH}-\overset{O}{\overset{\|}{C}}-CH_2-CH_2OH$
    (iv) $CH\equiv C-\underset{CH(OH)}{\overset{OH}{C}}-CH_2-CH_3$
    (v) $CH_3-CO-\overset{CH_3}{C}(CH_2OH)-CHO$

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி இனியும் வரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயனின் விசேட ஆசிரியர் குழாமின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சி

சரியான விடையின்கீழ்க் கோடிடுக.

அருகில் தரப்பட்டுள்ள உருவை நன்கு அவதானித்து 01ஆம், 02ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.



01. உருவிலுள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
1) 1   2) 2   3) 3

02. உருவிலிருந்து பெறக்கூடிய ஆகக்கூடிய செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
1) 2   2) 5   3) 6


அருகில் தரப்பட்டுள்ள உருவை நன்கு அவதானித்து 03ஆம், 04 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.



03. உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1) 6   2) 7   3) 8

04. உருவிலிருந்து பெறக்கூடிய ஆகக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1) 9   2) 7   3) 8


அருகில் தரப்பட்டுள்ள உருவை நன்கு அவதானித்து 05ஆம், 06 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.




05. உருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?
1) 4   2) 5   3) 6

06. உருவிலிருந்து பெறக்கூடிய ஆகக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?
1) 4   2) 5   3) 6

07.



இக் கடிகாரம் காட்டும் நேரத்துடன் 75 நிமிடங்களைக் கூட்டும்போது கிடைக்கும் நேரம் யாது?
1) 3 மணி 30 நிமிடங்கள்.
2) 3 மணி 35 நிமிடங்கள்.
3) 3 மணி 45 நிமிடங்கள்.




08. உருவிலுள்ள தராசில் காணப்படும் பொருளிலிருந்து 3 கிலோகிராம் பொருளை எடுத்தால், தராசுமுள் காட்டும் வாசிப்பு யாது?
1) 7
2) 8
3) 9

09. கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்களில் கண்ணாடியில் தோன்றும் விம்பம் அல்லாத எழுத்து எது?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A | X | E | T | E | A |

1) A   2) T   3) E

10. கீழே தரப்பட்டுள்ள அளவுச்சட்டத்தில் உடைந்த பகுதியின் உண்மையான நீளம் யாது?



1) 19cm   2) 16cm   3) 17cm

11. உருவிலுள்ள பேனையின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர்?
1) 5cm   2) 18cm   3) 11cm

12. தராசிலுள்ள ○○○ (மூன்று வட்டங்கள்) இனது நிறை யாது?





1) 9kg   2) 12kg   3) 14kg

13. தராசிலுள்ள □□□□ (நான்கு சதுரங்கள்) இனதும் நிறை யாது?
1) 9kg   2) 12kg   3) 14kg

14. வினாக்குறி இடப்பட்டுள்ள கூட்டுக்குள் வரவேண்டிய எண் யாது?
1) 7   2) 6   3) 5

15. உருவிலுள்ள சக்கரங்கள் இரண்டும் அம்புக்குறிகள் காட்டும் திசையில் சுழலுகின்றன. தற்போது 4,5 இற்கு இடையிலுள்ள 1என்னும் பல்அடுத்த சுழலுகையின் போது எவ் இலக்கங்களுக்கிடையில் வரும்?
1) 2, 3
2) 3, 4
3) 5, 6




பின்வரும் உருக்களை அவதானித்து 16ஆம், 17ஆம் வினாக்களுக்கு விடைதருக.



16. நிறை குறைந்த பொருள் எது?
1) ○   2) □   3) △

17. நிறை கூடிய பொருள் எது?
1) ○   2) □   3) △


18. உருவிலுள்ள இரும்புச்சட்டகத்தினுள் பொருந்தக்கூடிய ஆணி எது?






1)   2)   3)


19. உருவிலுள்ள அட்டைக்கீலத்தைப் பயன்படுத்தி ஆக்கமுடியாத சதுரமுகி (தாயக்கட்டை) எது?






1)   2)   3)

20. உருவிலுள்ள தாயக்கட்டையை ஆக்க பயன்படுத்தப்பட்டுள்ள அட்டைக்கீலம் எது?







1)   2)   3)

சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

21. 1cm இடைவெளியில் ஆணிகள் அறைந்துள்ள கேத்திரகனிதப்பலகை உருவில் காட்டப்பட்டுள்ளது. ஒரு மெல்லிய இறப்பர் பட்டியினால் ஆணிகளைச்சுற்றி அமைக்கப்பட்டுள்ள வடிவத்தின் பரப்பளவு யாது? ( ................... )




22.





கனவுரு வடிவமுள்ள ஐந்து ஒத்த மரக்குற்றிகளை ஒன்றின்மீது ஒன்று வைத்து அமைத்த வடிவம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இவ் அடி 3cm நீளமுடையது எனின், இதன் உயரம் எவ்வளவு? ( ................... )

23.




உருவில் காட்டப்பட்டுள்ள cm அளவுத்திட்டத்திற்கேற்ப பேனையின் முடியை விட பேனை எவ்வளவுநீளமானது? ( ................... )

24. கேத்திரகனித பலகை ஒன்றில் அறையப்பட்டுள்ள ஆணிகள் இறப்பர்பட்டி ஒன்றினால் சுற்றப்பட்டுள்ள வடிவத்தை உரு காட்டுகிறது. ஆணிகளுக்கிடையே உள்ள தூரம் 1km எனின், இவ் வடிவத்தின் பரப்பளவு யாது? ( ................... )




பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

25. இடப்பக்கத்திலுள்ள கடிகாரமுகத்தை அவதானியுங்கள். அதில் காணப்படும் நேரத்தின் பின்னர் முதற்றடவையாக மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் செங்கோணமாக அமையும் நேரத்தை வலதுபக்கத்தில் உள்ள கடிகாரமுகத்தில் வரைந்து காட்டுக.



26. பூம்பாத்தி ஒன்றின் வடிவம் எதிரே தரப்பட்டுள்ளது. இதன் சுற்றளவு யாது? ( ................... )





27. 0.8, 0.2, 1.1, 0.5 ......... என்னும் தொடரிலுள்ள எண்களை ஏறுவரிசைப்படி ஒழுங்குபடுத்தி மீண்டும் எழுதுக. ..........................................

28. 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் கனவளவுள்ள குளிர்பானம் 6 மாணவர்களிடையே சமமாகப் பங்கிடப்பட்டது. மாணவன் ஒருவன் பெற்றுக்கொண்ட குளிர்பானத்தின் அளவு யாது? ( ................... )

29. 5 மீற்றர் நீளமான கம்பித்துண்டு ஒன்றில் 1m 75cm நீளமுள்ள துண்டு வெட்டி எடுக்கப்பட்டது. மீதித் துண்டின் நீளம் யாது? ( ................... )

30. செவ்வகம் ஒன்று சமமான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சில பகுதிகளுக்கு நிறம் தீட்டப்பட்டுள்ளது. நிறந்தீட்டிய பின்னர் எஞ்சியிருக்கும் பகுதிகளின் எண்ணிக்கை செவ்வகத்தின் என்ன பின்னமாகும்? ( ................... )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்டம்; சூடுபறக்கும் ஆட்டத்தில் தேவரையாளி வென்றது!

யாழ்ப்பாணம், ஜூன்30

உதைபந்தாட்ட சம்மேளனம் இ.ச. பேரம்பலம் சக நிறுவன அனுசரணை யுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சூடுபறக்கும் விறு விறுப்பான ஆட்டம் ஒன்றில் தேவரை யாளி இந்துக் கல் லூரி வெற்றிபெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத் தில் நடந்த இந்த ஆட்டத்தில் தேவைரை யாளி இந்துக் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஆட்ட ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக அமைந்தது. இரு அணியி னரும் விட்டுக் கொடுக்காமல், சளைக் காமல் ஆடினர்.

இடைவேளைக்குப் பின் ஆட்டம் உச் சக்கட்டத்துக்குச் சென்றபோது, இரு அணி யினரும் தலா 2 கோல்களைப் போட் டனர். இதனால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

ஆட்டமுடிவில் சமநிலை உடைப்பு உதைப்பு இரு அணியினருக்கும் வழங்கப் பட்டது. தேவரையாளி அதைப்பயன் படுத்தி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென்.ஜேம்ஸ் ம.விக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் சென்.ஜேம்ஸ் 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

சென்.ஜேன்ஸ் ம.விக்கும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கும் இடையில் இடம்பெற்ற இன்னோர் ஆட் டத்தில் சென்.ஜேம்ஸ் 3:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

சென்.ஜேம்ஸ் ம.விக்கும் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் நடந்த மற்றோர் ஆட்டத்திலும் சென். ஜேம்ஸ் 4:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் அரையி றுதிப் போட்டிகளில் தேவரையாளி இந்துக் கல்லூரியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரியும்-

சென்.ஜேம்ஸ் ம.வியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதவி ருக்கின்றன. (1)

## காவலூர் பெருவிளையாட்டு போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை,ஜூன்30

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதி பர் செயலகப் பிரிவுக்கு உட்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையே பெரு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற் றன.

வெற்றி பெற்ற அணிகள் வருமாறு:-

துடுப்பாட்டம்

*ஆண்கள்* -அனலைதீவு லக்கி ஸ்ரார் வி.க., தம்பாட்டி காந்திஜி வி.க.

கரப்பந்தாட்டம்

*ஆண்கள்* - ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம், அனலை தீவு அருணோதயா வி.க.

(1)

## சூடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# காவலூர் உதைபந்தாட்டப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி கேடயத்தைச் சுவீகரித்தது!

ஊர்காவற்றுறை, ஜூன் 30

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் சம்பியனாகியுள்ளது.

இறுதிப் போட்டி தம்பாட்டி காந்திஜி விளையாட்டு கழகத்திற்கும் மெலிஞ்சினி முனை இருதயராசா விளையாட்டுக் கழகத் திற்கும் இடையே இடம்பெற்றது.

இறுதிவரை விறுவிறுப்பாகவே இப் போட்டி இடம்பெற்றது. இருதயராசா விளையாட்டுக் கழகத்திற்கு கிடைத்த பல அருமையானகோல்போடும் வாய்ப்புக் களை அவர்கள் தவற விட்டிருந்தனர்.

இடைவேளைக்கு முன்னர் இரு பகுதியினரும் கோல் எதனையும் போட வில்லை. இடைவேளைக்குப் பின்னர் இரு அணிவீரர்களும் ஆக்ரோஷமாக விளையா டினர்.

போட்டி முடிவடைவதற்கு சில நிமி டங்களுக்கு முன்னர் தம்பாட்டி அணி வீரர் தனக்குக் கிடைத்த பந்தை லாவகமாக கோல்கம்பத்தை நோக்கி செலுத்தினர். இதன் மூலம் தம்பாட்டி காந்திஜி விளை யாட்டுக்கழகம் 1:0 என்ற அடிப்படையில் பிரதேச சம்பியனாகியுள்ளது. (1-127)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்30

புத்தூர் மேற்கு கலைமகள் வி.க. நடத்தி வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* பி.ப.3.30 மணி - உரும்பிராய் நட்சத் திரம் வி.க. அணி எதிர் புத்தூர் கலைமதி வி.க.
* பி.ப. 4.30 மணி - புத்தூர் விக்கினேஸ் வர வி.க. 'பி' அணி எதிர் அச்செழு வளர்மதி வி.க. அணி. (1)

* * *

அமரர் சந்திரகுமாரின் 12 ஆவது ஆண்டு நினைவாக அராலி திருமகள் விளையாட் டுக்கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் கின்அனுசரணை யுடன் கழக மைதானத் தில் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங் களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங் கள் வருமாறு:-

* அராலி சில்வஸ்ரார் வி.க. எதிர் நவாலி யூனியன் வி.க.
* ஆனைக்கோட்டை மகாத்மா வி.க. எதிர் இளவாலை யங்கென்றீஸ் வி.க. (1-86)

* * *

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட் டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சி விளை யாட் டுச் சங்கத்தின் அனுசரணையுடன் யூனி யன் அசூரன்ஸ் நிறுவன ஆதரவுடன் நடத்தி வரும் தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று பி.ப. 4 மணிக்கு நடைபெறும் ஆட் டத்தில் கொக்குவில் வராகி வி.கவும் இணு வில் அண்ணா வி.கவும் மோதுகின்றன. (1)

## தென்மராட்சி வலய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ளன.

பாடசாலைகள் தமது அணிகளுக்கான பயிற்சிகளை ஆரம்பிக்குமாறு வலயக் கல் விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறி வித்துள்ளார். (1-207)

# மாவட்ட செயலகமட்ட உதைபந்தாட்டத்தில் கோப்பாய் பிரதேச அணி அரையிறுதிக்குத் தகுதி

வலி .வடக்கு, ஜூன் 30

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந் தாட்ட சுற்றுப்போட்டியில் அரையிறு திக்கு கோப்பாய் பிரதேச செயலக அணி தெரிவாகியுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச அணியும், பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டியில் ஆரம்பம் முதல் இரு அணிகளும் கோல்கள் பெறுவதில் முழு அக்கறையுடன் விளையாடினார்கள். இரு அணிகளுக்கும் ஆரம்பம் முதல் இறுதி வரை பல சந்தர்ப்பங்கள் கோல்கள் பெற வாய்ப்பு கிடைத்த போதிலும் இரு அணி களும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

முதல் பாதி ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் வேளையில் கோப்பாய் பிரதேச செயலக அணியின் இடது கரை வீரர் தனக்குக் கிடைத்த பந்தொன்றை கோல்கம்பத்தை நோக்கி உதைத்தார்.

இந்தப் பந்து யாரும் எதிர்பாரா வண்ணம் எதிரணி வீரரின் காலில் பட்டு, கோல்கம் பத்தில் சென்றது. கோப்பாய் பிரதேச செய லக அணி ஒரு கோல் பெற்ற நிலை யில் முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் கூட பருத்தித்துறைப் பிரதேச செயலக அணிக்கே கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் அதிகமாக இருந்த போதிலும் முன்னணி வீரர்கள் விட்ட தவறினால் கோல்கள் பெறும் வாய்ப்புகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டன. அடித்த பந்துகளும் கூட கோல்கம்பத்திற்கு மேலால் சென்றன.

கோப்பாய் பிரதேச செயலக அணியின் முன்னணி வீரருக்குக் கிடைத்த ஒரு பந்தை மிகவும் இலகுவாக பெற்று வலக்காலால் இடக்காலுக்கு பந்தை மாற்றி கோல் கம்பத்தில் அடித்து இரண்டாவது கோலை யும் போட்டி முடிவடைய சில நிமிடங்கள் இருக்கும் வேளையில் பெற்றுக் கொண்டது.

ஆட்டம் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து கோப்பாய் பிரதேச செயலக அணி 2:0 என்ற கோல்கணக்கில் பருத்தித்துறைப்பிரதேச செயலக அணியை வெற்றி பெற்றது. (1-86)

# பெரியபுலம் ம.வியை 83 ஓட்டங்களால் வென்றது கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம், ஜூன் 30

பாடசாலை அணிகளுக்கு இடையே யான 17 வயதுப் பிரிவினருக்கான நட்பு ரீதியான ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக்கல்லூரி 83 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத் தில் யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தி யாலயத்திற்கும், கொக்குவில் இந்துக்கல் லூரிக் கும் இடையேயான ஆட்டம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்கு வில் இந்துக்கல்லூரி 50 ஓவர்கள் நிறை வில் 09 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பவிராஜ் 35, கபில்ராஜ் 27, யனுதாஸ் 25, கார்த்திக் 23, நிசாந் 15 ஓட்டங்களைப் பெற்றக்கொண்டார்கள்.

பிரதீசன் 10 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட் டங்களுக்கு 4 விக்கெட்டையும், அனு ஜன் 08 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 28 ஓட்டங்களுக்கு 2 விக் கெட் டையும், சர்வேஸ்வரன் 09 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் டையும், நிமலரூபன் 5 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினார்கள்.

220 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய பெரியபுலம் மகாவித்தியாலயம் 31.3 ஓவர்களில் அனைத்து விக்கெட் டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

தர்சன் 39, பிரதீசன் 23 , துசாவியன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

யனுதாஸ் 6.3 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 32 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டையும் யனுகுலன் 6 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 09 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் கார்த் திக் 03 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 19 ஓட்டங் களுக்கு ஒரு விக் கெட்டையும் பவிராஜ் 04 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் டையும், பவிதரன் 03 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# போட்டிகளில் கேடயங்களை தமதாக்கிய வீர, வீராங்கனைகள் இங்கே..



பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் வெற் றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்ட இல்லத்தின் தலைவர் சேரன், பிரதம விருந்தினர் திருமதி கருணா [illegible] ரவிந்திரனிடமிருந்து வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொள்ளும் போது. (1-236)



கைதடி நாவற்குளி அ.த.க. பாடசாலை இல்ல மெய் வல்லமைப் போட்டியில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் 17 வயதுப் [illegible] செல்வி சன் [illegible] கேடயம் வழங்கும் போது. (1-207)



இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய விளையாட்டு அபிவிருத்திக் குழுவால் நடத்தப்பட்ட எல்லை கடந்த நட்சத்திரங்களுக்காக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பெண்க ளுக்கான ஆட்டத்தில் வெற்றிபெற்ற சங்கானை சிவப் பிரகாச வித்தியாலய அணித் தலைவிக்கு வலிகாமம் வலய உதவி உடற் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா வெற்றிக்கிண்ணம் வழங்கும்போது... (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

கோண்டாவில் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்

சர்வதாரி வருஷ மஹோற்சவம்

30.06.2008 - 11.07.2008

| | | |
|---|---|---|
| 29.06.2008 ஞாயிற்றுக்கிழமை | பி.ப. 3 மணி விநாயகர் வழிபாடு, மஹோற்சவ பூர்வாங்க கிரியைகள் | |
| 30.06.2008 திங்கட்கிழமை | மு.ப. 10 மணி கொடியேற்றம் | |
| 05.07.2008 சனிக்கிழமை | காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம் பி.ப. 4.30 மணி பூச்சப்பரம் | |
| 06.07.2008 ஞாயிற்றுக்கிழமை | காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம் பி.ப. 4.30 மணி கைலாயவாகனம் | |
| 07.07.2008 திங்கட்கிழமை | காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம் ந.ப. 12 மணி வேட்டைத்திருவிழா பி.ப. 4.30 மணி சப்பரம் | |
| 08.07.2008 செவ்வாய்க்கிழமை | மு.ப. 9.30 மணி இரதோற்சவம் | |
| 09.07.2008 புதன்கிழமை | மு.ப. 9.30 மணி தீர்த்தோற்சவம் (ஆனி உத்தரம்) மாலை 4.30 மணி கொடியிறக்கம் | |
| 10.07.2008 வியாழக்கிழமை | பி.ப. 3.00 மணி திருக்கல்யாணம் (முருகப்பெருமான்) | |
| 11.07.2008 வெள்ளிக்கிழமை | பி.ப. 4 மணி வைரவர் உற்சவம் | |

விசேட குறிப்பு

| கொடியேற்றம் | இரதோற்சவம் | தீர்த்தோற்சவம் |
|---|---|---|
| வசந்த மண்டபப் பூஜை - காலை 8.30 மணி | வசந்த மண்டபப் பூஜை - காலை 8.00 மணி | வசந்த மண்டபப் பூஜை - காலை 8.00 மணி |
| கொடியேற்றம் - முற்பகல் 10 மணி | சுவாமி தேர் பவனி - காலை 9.30 மணி | சுவாமி தீர்த்தமாடுதல் - காலை 9.30 மணி |

தினமும் உதயபூசை காலை 6.00 மணி, அபிஷேகம் காலை 7.30 மணி, வசந்தமண்டபப்பூசை மு.ப. 10.30 மணி. சாயரட்சை பூசை பி.ப. 2.30 மணி, வசந்தமண்டபப் பூஜை பி.ப. 3.30 மணி, கொடியிறக்கக் கிரியைகள் பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகும். உற்சவ நாள்களில் இரவுத் திருவிழா தினமும் மாலை 5.30 மணிக்கு நிறைவுபெறும்.

மஹோற்சவ குரு: ஈசான சிவாச்சாரியார் இ.ரமணீதரக் குருக்கள்

தினமும் காலை பஞ்சமுக விநாயகருக்கு பஞ்சமுக அர்ச்சனை நடைபெறும்.

தினமும் அன்னதானம் நடைபெறும்.

கோண்டாவில் கிழக்கு. ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

(75858)


கிராமசேவையாளர் நேர்முகத்தேர்வில் தோற்றத்தவறியவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர்பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கடந்த 23, 24, 25 ஆம் திகதிகளில் செயலகத்தில் நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வுகளுக்கு சமுகமளிக்கத் தவறியவர்களுக்கான நேர்முகத்தேர்வு மீண்டும் ஒரு நாளில் நடத்தப்படவுள்ளது. எனவே தோற்றத் தவறியவர்களை அரச அதிபர் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

(203)


## சேவை நலன் பாராட்டு



எமது அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலையில் நீண்டகாலம் பணியாற்றி இன்று (30.06.2008) திங்கட்கிழமை ஓய்வு பெற்றுச் செல்லும்

வேலன் அப்பையா

அவர்கள் தனது ஓய்வு காலத்தில் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

பணியாளர் நலன்புரிச் சங்கம், அரசினர் ஆயுள் வேத வைத்தியசாலை, கைதடி.

(75811)


## மரண அறிவித்தல்

### திருமதி நல்லையா செல்லம்மா



தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா செல்லம்மா 23.06.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் நல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும் பாலசிங்கம், பஞ்சாட்சரம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, மல்லிகாதேவி, சீதாலட்சுமி (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), சிறீ (பிரான்ஸ்), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் பரமேஸ்வரி, புவனசுந்தரி, (பிரான்ஸ்), பரமேஸ்வரன், பவளராசா, அருமைத்துரை (பிரான்ஸ்), மகாலட்சுமி (பிரான்ஸ்), ஆனந்தி (பிரான்ஸ்), சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் வினிதன் (பிரான்ஸ்), விகுந்தன் (பிரான்ஸ்), விஜயன் (பிரான்ஸ்), வித்தியா, விமலன், விகுந்தா, வினோதினி, நிரூஷா (பிரான்ஸ்), நிசாந்தன் (பிரான்ஸ்), நிரஞ்சனா (பிரான்ஸ்), மதுரங்கா, தயாளி, தனுஜா, பாஸ்கரன் (பிரான்ஸ்), விதுர்சா, நதீஸ், ராதா (பிரான்ஸ்), அனிதா (பிரான்ஸ்), அசோக் (பிரான்ஸ்), அகில் (பிரான்ஸ்), அபிதா (பிரான்ஸ்), பிரதீபன் (பிரான்ஸ்), பிரதீபா (பிரான்ஸ்), பார்த்தீபன் (பிரான்ஸ்), சிறித்தனா (பிரான்ஸ்), சபிதா (பிரான்ஸ்), நிருஜன் (பிரான்ஸ்), லிவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சோபிதனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலன்பிராய் பிணாருங்கை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தச்சன்தோப்பு,
கைதடி.

(75867)

### திருமதி மகாதேவன் சபித்திரா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி மகாதேவன் சபித்திரா (25.06.2008) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் இ.மகாதேவனின் அன்பு மனைவியும் அரவிந்தன், கபாஸ்கர் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2008) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.துரைசிங்கம் (மைத்துனர்- பெரியதந்தை).

பிள்ளையார் கோவிலடி,
வடலியடைப்பு.

(75872)

### வின்சன்போல் மரியஜஸ்டின் வனிதா



மாதகலைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வின்சன்போல் மரியஜஸ்டின் வனிதா (28.06.2008) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மண்டைதீவைச் சேர்ந்த வின்சன்போல் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவரான மரிய நீட்டர் மற்றும் யேட்ரூட்ராணி தம்பதியரின் அன்பு மகளும் இருதயநாதர்-விற்றோறியாப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் பஸ்ரியன், ஜெரிக்கா ஆகியோரின் அன்புத் தாயும் பூட்டின் சகோதரியும் பீற்றர்தாஸ், அன்சலோ பீற்றர் (கொழும்பு), பீற்றர்போல், அருட்தந்தை பெற்றுஸ் தயாபரன் (ரோம்), ஜேயா நந்தி (இத்தாலி), அனட் ஜீவா (ஆஸ்திரேலியா), இருதயமலர் (நோர்வே) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2008) செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெற இருப்பதால் இரங் கல் திருப்பலி யாழ்.மரியன்னைப் பேராலயத்தில் நாளை (01.07.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு வீட்டில் துக்க நிகழ்வு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இருதயநாதர் பீற்றர்தாஸ்
குடும்பத்தினர்.

இல.380, பாங்சால் விதி,
யாழ்ப்பாணம்.

(75873)

## முன்பள்ளி ஆசிரியர் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 30

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப்பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(02-207)

## கருங்குளவிகள் தாக்கி மூவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

பனைமரத்திலிருந்து வீழ்ந்த பனையோலைக்குள்ளிலிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் வீதியில் சென்றோரைத் தாக்கின.

இரு சிறார்கள் உட்பட மூன்று பேருக்கு குளவிகள் கொட்டியுள்ளன.

• இச்சம்பவம் அல்லாரை வடக்கு, கொடிகாமத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த யூஸ்ரர் யூலியஸ் தனிஸ்ரன் (வயது 7), சசிகுமார் கஜந்தன் (வயது 10), சி. தாமகுலசிங்கம் (வயது 45) ஆகியோரே குளவிகளால் தாக்கப்பட்டவர்களாவர்.

மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(203-207)

## ஈரக்கையினால் ஆழியை அழுத்திய யுவதிக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

மின்சாரம் தாக்கி யுவதி காயமடைந்தார். இச்சம்பவம் நாவற்குழியில் இடம்பெற்றது.

ஈரக்கையினால் மின் ஆழியை அழுத்தியபோது மின்சாரம் தீண்டியதில் கை எரிகாயங்களுக்கு இலக்கானது.

இதே இடத்தைச் சேர்ந்த ரீ.டஜீலி (வயது23) என்பவரே காயமடைந்தவராவார்.

எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் இந்த யுவதி சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(203-207)

## பண்டத்தரிப்பில் அடுத்த வாரம் முதல் உலர் உணவு நிவாரணம்

வலி. தென்மேற்கு, ஜூன் 30

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நலிந்த குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரண விநியோகத்தை அடுத்த வாரம் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கான வெள்ளை நிற பங்கீட்டு அட்டைகள் கிராம அலுவலர்களால் இந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது.

உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நலிந்த குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுகின்றது.

(203-135)


### ஒத்துமாறல்

கண்டி மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலையில் தமிழ் மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் ஆசிரியர் (கல்வியற் கல்லூரி முடித்த) யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புக்கு: 077 9785759

T.தவராஜா,
கேணியடி லேன், திருநெல்வேலி.

(75886)

### தேவை

நல்ல பாவனையில் உள்ள LML SLECT II ஸ்கூட்டர் விற்பனைக்கு இருப்பின் தொடர்பு கொள்ளவும்.

மு.விமலநாதன்
இல. [illegible], ஆஸ்பத்திரி வீதி,
[illegible]

(க/553532)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் கந்தசாமி செல்லம்மா


மண்ணகம்: 10.12.1933 விண்ணகம்: 31.05.2008

கடந்த 31.05.2008 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி கந்தசாமி செல்லம்மா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.06.2008) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 11 மணியளவில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(75825) மாசேரி, வரணி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

சவரிமுத்து டேவிற்

பிறப்பு 20.03.1932

இறப்பு 31.05.2008

பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய்
பாசமுடன் இணைந்த இனிய உங்கள் முகம்
எங்கள் நெஞ்சை விட்டகலாது.


உமது ஆத்மா நித்திய பேரின்பப் பெருவாழ்வு பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவால் துயருறும்:
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர், ஊரவர்கள்.

மத்யூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(75836)

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் இராசா கந்தவனம் அருளானந்தம்

தோற்றம்: 01.07.1927 மறைவு: 31.05.2008

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும்
என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு
இளைப்பாறுதல் தருவேன். (மத்-11-28)

ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும்- அப்பா
உங்கள் பசுமையான நினைவுகளை- எங்களால்
மறக்கமுடியவில்லையே!
தரணி போற்றநாம் உயர்ந்திடத்
தளராது உழைத்த- அப்பாவே!
உங்கள் இன் முகம் காணாமல் இன்சொல் கேளாமல்
பாரினிலே பரிதவிக்கின்றோம்
பரமனிடம் சென்றீரோ
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது நம் துயரம் மாறாது நம் கவலை.

அவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (2008.06.30) திங்கட்கிழமை மாலை 4.30மணிக்கு ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
ஏழாலை தெற்கு. மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஜோண்- பத்மா.

(75772)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இந்தியப் படைகளின் வருகையின் பின்னணியில் சில காரணங்கள்

சரித்திரம் தலைகீழாகத் திரும்புகின்றது என்பதையே நிகழ்வுகள் காட்டுகின்றன.

1980 களின் கடைசியில் ஆட்சிப்பீடம் ஏறிய ஜனாதிபதி பிரேமதாஸா, அவ்வேளையில் 'சார்க்' உச்சி மாநாட்டை இலங்கையில் நடந்த வேண்டியவரானார்.

இலங்கையின் வடக்கு - கிழக்கில் இந்தியத் துருப்புகள் 'அமைதி காக்கும் படை' என்ற பெயரில் ஆக்கிரமித்து நின்றமையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பெரும் யுத்தம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தன.

"ஓர் ஆக்கிரமிப்புப்படை(இந்தியப்படை) இலங்கையில் பலவந்தமாக நிலை கொண்டிருக்கும்போது, 'சார்க்' மாநாடு போன்ற ஒரு மாநாட்டை இங்கு நடத்த முடியாது. ஆக்கிரமிப்பு இராணுவத்தினால் இலங்கையின் இறைமைக்குத் தீங்கிழைக்கப்பட்டிருக்கையில் எந்த முகத்துடன் இந்த 'சார்க்'கை நடத்துவது? ஆகவே நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் எனது உத்தரவுக்குக் கட்டுப்பட்டு ஆக்கிரமிப்புப் படைகள் இங்கிருந்து வெளியேறிய பின்னர்தான் 'சார்க்' மாநாட்டை இலங்கையில் நடத்த முடியும்." - என்று அப்போது அறிவித்தார் அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸா.

இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்தியப் படைகளை இங்கிருந்து வெளியேற்றுவதற்கான தனது தந்திர முயற்சிக்கு 'சார்க்' மாநாட்டை அன்று பயன்படுத்தினார் அவர். அதில் அவர் வெற்றியும் கண்டார்.

'இந்திய (ஆக்கிரமிப்பு) இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறிய' சூழ்நிலையில் 'இறைமை உறுதிப்படுத்தப்பட்ட இலங்கையில்' சார்க் மாநாட்டை நடத்திக்காட்டினார் பிரேமதாஸா.

அன்று இந்தியப் படையை வெளியேற்ற 'சார்க்' மாநாட்டை இலங்கை ஜனாதிபதி வசமாகப் பயன்படுத்தினார் என்றால் -

இன்றோ, 'சார்க்' மாநாட்டை இன்றைய இலங்கை ஜனாதிபதி நடத்துவதற்கு நிபந்தனை போட்டு, அந்த நிபந்தனை மூலம் தனது இந்தியப் படைகளைக் கொழும்புக்குள் இறக்குவதில் வெற்றி காணும் நிலையில் இந்தியத்தரப்பு வந்திருக்கின்றது.

'சார்க்' உச்சி மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டுமானால் அதில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளின் தலைவர்களும் அதில் பிரசன்னமாகி இருக்கவேண்டும். ஒரு தலைவர் சமுகம் தராத நிலையில் கூட 'சார்க்' மாநாட்டை நடத்த முடியாது என்பதுதான் வழமையான ஏற்பாடு.

எனவே 'சார்க்'கின் முக்கிய உறுப்பு நாடான இந்தியாவை விட்டு விட்டு அந்த மாநாட்டை இலங்கை நடத்திவிட முடியாது என்பது இந்தியாவுக்கு நன்கு தெரியும். ஆகவே, 1989 இல் பிரேமதாஸா அரசு 'இந்தியப் படையை வெளியேற்றினால்தான் இலங்கையில் சார்க் மாநாடு' என்று விதித்த நிபந்தனைக்கு மாற்றாக 'இந்தியப் படைகளை இலங்கைக்குள் அனுமதித்தால்தான் இங்கு சார்க் மாநாடு' என்ற கட்டாயத்தை இலங்கைக்கு இப்போது ஏற்படுத்தி அதில் வெற்றியும் காணும் நிலையை எட்டியிருக்கின்றது இந்தியா.

இலங்கைக்கு இந்தியப் பிரதமர் விஜயம் செய்வதாயின் இந்தியாவே அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் படைகளையும் இலங்கையில் நிறுத்த வேண்டும் என்று இந்தியா போட்ட நிபந்தனைக்கு இலங்கை மண்டியிட்டிருக்கின்றது.

இத்தகைய நிபந்தனையை விதித்து, அதற்குக் கொழும்புத் தலைமையை இணங்கச் செய்ததன் மூலம் இலங்கை தொடர்பான ஓர் உண்மையை இந்தியா சர்வதேச ரீதியில் பிரசித்தம் செய்திருக்கின்றது என்பதும் நாம் கவனிக்கத்தக்கது.

அதாவது முக்கிய உலகத் தலைவர் ஒருவர் கொழும்புக்கு விஜயம் செய்வதற்கான பாதுகாப்பு நிலைமையோ, அல்லது அவருக்கு இலங்கை அரசு தகுந்த பாதுகாப்புக் கொடுக்கும் என்ற உறுதிப்பாடோ இலங்கையில் இல்லை என்பதுதான் அது. அத்தகைய நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதானால் தங்களுக்குரிய பாதுகாப்பையும், ஏனைய ஏற்பாடுகளையும், பாதுகாப்புக்கான காவலர்களையும் கூட தத்தமது நாடு மூலமே இலங்கையில் செய்துகொள்ள வேண்டும் என்பதே இந்தியாவின் தற்போதைய நடவடிக்கை மூலம் துலாம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டத்துக்கான உதவி என்ற பெயரில் இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவுக்குச் சவாலாக இருக்கக்கூடிய நாடுகளையும் சக்திகளையும் இலங்கைக்குள் அதிகம் இழுத்து வந்து ஈடுபடுத்தியிருக்கின்றது கொழும்பு அரசு.

இந்தப் பின்புலத்தில், இந்தியத் தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யும்போது அந்த இந்திய எதிர்ப்பு சக்திகள், 'விடுதலைப் புலிகளின் பெயரில்' தாங்களே சில மோசமான விளைவுகளைத் தரக்கூடிய காரியங்களை - செயல்களை - ஒப்பேற்றி விட்டு, இலகுவாகப் பொறுப்பைப் புலிகளின் தலையில் சுமத்திவிட்டுத் தப்பிக் கொள்ள முயலலாம் என்ற சந்தேகமும் புதுடில்லிக்கு உண்டு.

இத்தகைய வீண் விபரீதங்களுக்கு எள்ளளவும் இடம் கொடுக்காமல், கொழும்புக்கு வரும் இந்தியப் பிரதமரின் பாதுகாப்பைத் தானே நேரடியாகத் தலையிட்டு நூறுவீதம் உறுதிப்படுத்தவும், இலங்கை தொடர்பான உண்மை நிலைவரத்தை சர்வதேச சமூகத்துக்குப் பகிரங்கப்படுத்திக் காட்டவுமே, இத்தகைய சொந்தப் பாதுகாப்பு நடவடிக்கைத் திட்டம் என்ற இந்தக் காய்நகர்த் தலை இந்தியா முன்னெடுத்திருக்கின்றது என்பது திண்ணம்.

# புங்குடு தீவுப் பகுதியில் விரைவில் தொலைத் தொடர்புக் கோபுரம்

யாழ்ப்பாணம்,ஜூன்30

புங்குடுதீவில் தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழு இதற்கான நடவடிக் கை எடுத்துள்ளதுடன் கோபுரம் அமைப்பதற்கான இடத்தினையும் தெரிவு செய்துள்ளது.

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் தொலைத் தொடர்பு கோபுரம் அமையவுள்ளதால் அதற்கான அங்கீகாரத்தை பெற யாழ். ரெலிக்கொம் அதிகாரிகள் வேலணைப் பிரதேச சபை செயலாளருடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

இதேவேளை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியோரது ஒத்துழைப்புடனேயே விரைவில் இத்திட்டம் நிறைவேறவுள்ளது என்று கூறப்படுகிறது.

இதனால், நீண்டகாலமாக இருந்து வந்த 'கவரேஜ்' (Coverage) பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்படும் எனவும் தீவக மக்கள் முழுமையாகத் தொலைத் தொடர்பு வசதியைப் பெற்றுக்கொள்வர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (203-95)

# வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரணச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்30

வலிகாமம் வடக்கு இடம்பெயந்தோர் நிவாரணச் சங்க விசேட பொதுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மூ.விநாயகமூர்த்தி சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கோப்பாய் பிரதேச செயலர், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ஆகியோர் கலந்து கொள்வர்.

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து வலிகாமம் கிழக்குப் பகுதியில் வதியும் அனைவரையும் பங்கீட்டு அட்டையுடன் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

# தென்மராட்சிப் பகுதியில் சுற்றிவளைத்துத் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன்30

தென்மராட்சி கச்சாய், மீசாலை மேற்கு, சங்கத்தானை ஆகிய பகுதிகளில் படையினர் நேற்று ஞாயிற்றுக் கிழமை பகல் பின்னால் பெரிய அளவில் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத் தினர்.

இதன்போது அனைவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி. ஆகியவற்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இத் தேடுதலின் போது எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை. (203 - 25)

# சிங்கபாகு நாட்டிய நாடகம் தமிழில் மேடையேற வேண்டும்

## அமரர் சரச்சந்திரவின் பாரியார் விருப்பம்

கொழும்பு, ஜூன் 30

பேராசிரியர் அமரர் சரச்சந்திரவின் சிங்கள நாடகங்களை தமிழ் மொழியில் மொழி பெயர்த்து மேடையேற்ற வேண்டும் என்று அமரரின் துணைவியார் லலிதா சரச்சந்திர விருப்பம் கொண்டுள்ளார்.

'சிங்கபாகு' என்ற சிங்கள பாரம்பரிய நாட்டிய நாடகம் பேராசிரியர் சரச்சந்திர எழுதி, நெறிப்படுத்தி மேடையேற்றிய நாடகங்களில் மிக பிரசித்தமும் சிங்கள ரசிகர்கள் - விமர்சகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டதுமாகும். இந்நாடகம் சமீபத்தில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளது. இந்த ஆங்கில நாடகத்தின் மூல நாடகத்தின் உயிர்ப்பு வெளிப்படவில்லை என்று திருமதி லலிதா சரச்சந்திர கவலை தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் சரஸ்சந்திரவின் நாடகங்கள் தமிழில் மொழியாக்கம் செய்து மேடையேற்றப்படுவதை விரும்புகின்ற திருமதி சரச்சந்திர இந்நாடகங்



கள் தமிழ் நாட்டிய மரபுகளுக்கும் பாடல் முறைகளுக்கும் மிகநெருக்கமாக இணைந்து போகக்கூடியவை என்று கருதுகிறார். பேராசிரியர் எழுதித் தயாரித்த 'மனமே' என்ற நாடகப் பிரதிகளை பேராசிரியர் சிவத்தம்பியிடம் கையளித்திருப்பதாக திருமதி லலிதா தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக மாணவர்கள் இந்நாடகங்களின் பயிற்சியிலும் மேடையேற்றங்களிலும் பங்கேற்பார்கள் என்று அவர் எதிர்பார்க்கின்றார்.

பேராசிரியர் சரச்சந்திரவின் 'சிங்கபாகு' நாட்டியநாடகம் 47 வருடங்களாக சிங்கள ரசிகர்கள் மத்தியில் மேடையேற்றப்பட்டு வந்துள்ளது. சிங்கள ரசிகர்களை மட்டுமன்றி சர்வதேச ரசிகர்களையும் இந்நாடகம் கவர்ந்துள்ளது. (ப)

# ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதைக் கடைகளை அகற்ற விரைவில் நடவடிக்கை - ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூன்30

யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்பாக உள்ள நடைபாதையில் பாதசாரி களின் நலன் கருதியே பாதுகாப்பு தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாதுகாப்பு நடைமுறை வேறு கார்ரணங்களுக்காக மேற்கொள்ளப்பட வில்லை.

இந்தப் பாதையில் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டுவரும் இடைஞ்சல்களை நீக்கு வதற்கு விரைவில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ இவ்வாறு 'உதயனுக்'குத் தெரிவித்தார்.

இந்தப் பாதுகாப்பு வேலி தொடர்பாக கேட்ட பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-

நடைபாதை பாதசாரிகளின் சீரான பாவனைக்கு அமைக்கப்பட்ட இங்குள்ள நடை பாதையில் வியாபாரம் மேற்கொண்டு வருகின்றனர். அவற்றை விரைவில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கு சகலரதும் ஒத்துழைப்புத் தேவைப் படுகிறது. பாதுகாப்பு தரப்பினரது ஒத்து ழைப்புடன் நடைபாதை போக்குவரத்து விரைவில் சீரமைக்கப்பட உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (203-302)

# தொழில் வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன்30

பாடசாலைக் கல்வியை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வை நடத்த யாழ்.வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

நல்லூர் கோட்டத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கு எதிர்வரும் புதன் கிழமையும் யாழ்ப்பாணக் கோட்டத்திற்கு உட்பட்டவர்களுக்கு அடுத்த புதன்கிழமையும் யாழ்.கல்வி வயலத்தில் உள்ள முகாமைத்துவ மண்டபத்தில் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

வடமாகாண கல்வி அமைச்சின் அனு சரணையுடன் இடம்பெறும் இந்தக் கருத் தரங்கில் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்களும், வலய முறைசாராக் கல்வி உத்தியோகத்தர்களும் வழிகாட்டல் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (203-302)

# யாழ்.கல்வி வலய பாடசாலை மாணவர்களின் வரவை மேம்படுத்த புதிய திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்30

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவை மேம்படுத்தும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வரவு குறைந்த மாணவர்களின் விவரங்களைப் பாடசாலை ரீதியாக திரட்டுவதற்கு வலயம் தீர்மானித்துள்ளது.

ஒழுங்கற்ற வரவுடைய மாணவர்களை கண்டறிந்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு பரிகார நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி தொடர்பாக அரச அதிபர் தலைமையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைவாகவே இந்த முதல் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையில் வரவு ஒழுங்கு குறைந்த மாணவர்களது விவரங்களை தர ரீதியாக தொகுத்து எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்பதாக முறைசார கல்விப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (203-302)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 17 | 01.07.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | பி.ப. 01.51 வரை |
| நட்சத்திரம் : | ரோகினி |
| | பி.ப. 04.34 |
| | 10.26 - 11.56 |
| ராகுகாலம் : | 02.56 - 04.26 |

# வலய மட்டக் கணித வினா - விடை போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன்30

யாழ்ப்பாணக் கல்வி வலய எல்லைப் பரப்பிற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான வலய மட்டக் கணித வினா - விடைப் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெற இருப்பதாக யாழ். கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் கனிஷ்ட இடைநிலை (தரம் -6,7,8), சிரேஷ்ட இடைநிலை (தரம் - 9,10,11) என இரு பகுதிகளாக நடைபெறும்.

மூன்று கோட்டங்களிலும் ஒரே நேரத்தில் வெவ்வேறு நிலையங்களில் போட்டிகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.மு.ப. 9 மணி தொடக்கம் 9.45 மணி வரை தரம் 6,7,8 வகுப்புகளுக்கும் தரம் 9,10,11 வகுப்புகளுக்கும் முற்பகல் 10 - 11 மணிவரை போட்டிகள் நடைபெறும்.

யாழ்.கல்விக் கோட்ட மாணவர்களுக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும் நல்லூர் கோட்டத்தை சேர்ந்தவர்களுக்கு இந்து மகளிர் கல்லூரியிலும் கோப்பாய்க் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கிறிஸ்தவக் கல்லூரியிலும் போட்டிகள் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆங்கில மற்றும் தமிழ் மொழி மூல மாணவர்களின் விவரங்களை பொறுப்பாசிரியர்கள் போட்டி நடைபெறும் நிலையத்திற்கு தனித்தனியாக எடுத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம் விற்பனையில்







# விற்பனையில்

- 125CC 3 VALVE CC VTIENAINE
- 82 KMPL
- 2வருட உத்தரவாதம்
- ஜக்கட், ஹெல்மட்
- 3 சேவிஸ் இலவசம்
- SELF START




- 100 CC
- 102 KMPL
- SELF START
- MAGWHEEL

## TVS COMPANY இன் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள்

# யசோ மோட்டார்ஸ்

## 163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



சைவத்திற்கும் சமூகத்திற்கும்
தொண்டாற்றியவரும், எமக்கு
வழிகாட்டியுமாக இருந்து
பெருமை பெற்ற
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களின் மறைவையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
சபையின் சார்பில் ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருப்பாதங்களில் சாந்தியடைய
அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் நந்தாவில் கற்புலந்து
மனோன்மணி அம்பாள்
ஆலய பரிபாலன சபையினர்.**

(75576)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 11 | | 31 |
| 04 | | 05 |
| 1927 | | 2008 |



## திருமதி நீலாயதாட்ஷி சிவராஜலிங்கம்

அன்பே வடிவெடுத்த எங்கள் அம்மாவே!
உங்கள் கருணை மழையில் நாம்
மகிழ்ந்திருந்த அந்தப் பசுமையான நாள்கள்
இன்றுபோல் எம்மை மிகவும் வாட்டுதம்மா
ஆலமரம்போல அருமைநிழல் தந்தவரே நீங்கள் மாணிக்கலாம்
உங்கள் நினைவுகள் என்றும் மரணிக்காது.

எமது தாயார் சிவபதமடைந்த செய்தி கேட்டுப் பல வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

86/2, சேர் பொன்.இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
T.P: 021 4590248 (75877)

**குடும்பத்தினர்.**

## மோட்டார் சைக்கிள்கள் கால்நடைகளுடன் மோதியதில் அவற்றில் பயணித்தோர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வீதிகளின் குறுக்கே ஓடிய கால் நடைகளுடன் மோதி மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இச் சம்பவங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றன.

சரசாலைப் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய ஆட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இதே இடத்தைச் சேர்ந்த நாகராசா வாகீசன் (வயது 20), சுந்தரலிங்கம் சதீஸ்வரன்(வயது23) ஆகியோரும்-

பாலாவிப் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இதே இடத்தைச் சேர்ந்த ஜே. தர்சன் (வயது 15) என்பவரும் காயமடைந்தனர்.

அத்துடன் நாவற்குழிப் பகுதியில் அளவுக்கதிகமான பாரத்தினை ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிள் தடம் புரண்டதில் அதில் பயணித்த என்.இராமநாதன் (வயது 50) என்பவரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (203-207)


## AIDLINES - LABORATORY

**எமது வாடிக்கையாளர்களுக்கு,**

508, வைத்தியசாலை வீதியில் இயங்கிய எயிட்லைன்ஸ் மருத்துவ ஆய்வுகூடம் தற்போது 16,மணிக்கூண்டு கோபுர வீதியில் காலை 7 மணியிலிருந்து மாலை 4 மணி வரை இயங்கி வருகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

**நிர்வாகத்தினர்.**
(எயிட்லைன்ஸ்
ஆய்வுகூடத்தினர்)

(75365)


## மிளகாய்ச் செடிகளில் குருமன் நோய்

வலி.தெற்கு, ஜூன்30

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் விவசாயிகள் செய்கை பண்ணிய மிளகாய்ச் செடிகளில் குருமன் நோய் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் கிருமிநாசனியை விசிறி வருகின்ற போதிலும், பூரணமான குருமன் நோய் நீங்கவில்லை என்றுகவலை தெரிவிக்கின்றனர்.

இப்போது மிளகாய்ச் செடிகளில் பிஞ்சு பிடிக்கும் காலமாகையால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(203-135)

## பெண்களுக்கான கடலக தொழில்நுட்பவியல் பயிற்சி - 2008

**மேற்படி பயிற்சி நெறியைப் பயில விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தை 16.07.2008ஆம் திகதிக்கு முன் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.**


வயது எல்லை : 18-35
பயிற்சிக் காலம்: மூன்று மாதம்

**உதவிப் பணிப்பாளர்,**
*கடற்றொழில் மற்றும்
கடலோட்டு எந்திரவியல்
கல்லூரி, யாழ்ப்பாணம்.*

*இல:372, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.*
T.P.222 6251 (75847)

## நெஞ்சை விட்டகலாத 13ஆம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 29 | | 30 |
| 10 | | 06 |
| 1929 | | 1995 |



## திரு.குருகுலம் ஏபிரகாம்லிங்கன்

*(இளைப்பாறிய ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி)*

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் புகலிடமாய்
பண்பின் பொக்கிசமாய் கடமையில் கண்ணியமாய்
எம்மை வழிநடத்திச் சென்றீரே! ஆண்டுகள் பதின்மூன்று அகன்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்மை விட்டகலாது.

*உங்கள் நீங்காத நினைவுகளுடன்:*
**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*77,புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.* (75875)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்குழு விதித்த நிபந்தனைகளுக்கு ஜனாதிபதி மஹிந்தா இணக்கம் தெரிவித்தார்

இந்தியாவின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு கடந்த 20ஆம் திகதி இலங்கை வந்து இங்கு இரண்டு நாள்கள் தங்கிச் சென்றமை தொடர்பான - சுவாரசியமான - தகவல்கள் நேற்று ஆங்கில வார இதழ்களில் வெளியாகியிருந்தன.

அவற்றில் வெளியான முக்கியமான தகவல்கள் சில வருமாறு:-

இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினரின் இலங்கைக்கான பயணம் குறித்து முதல் நாளான ஜூன் 18ஆம் திகதி கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் ஊடாக ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

**வெளிவிவகார அமைச்சருக்கும் பிந்தித்தான் விடயம் தெரியும்**

ஜனாதிபதி செயலகத்துக்கு இது குறித்து அறிவித்த இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத், உயர்மட்டக் குழுவினரின் வருகை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் முக்கிய விடயங்கள் பற்றிப் பேசுவதற்காக எனத் தனக்கு அறிவிக்கப்பட்டிருந்ததால், இது குறித்து ஊடகங்கள் உட்பட எவருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டாம் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் வெளிவிவகார அமைச்சருக்கே இந்த விடயம் உயர்மட்டக் குழுவினர் கட்டுநாயக்காவில் வந்து இறங்கிய பின்னரே தெரியவந்தது.

இதனால், முற்பகல் 11.40 மணிக்குக் கட்டுநாயக்கா வந்திறங்கிய இந்தக் குழுவினரை வரவேற்க இலங்கை அரசு சார்பில் எவருமே விமான நிலையத்திற்கு அனுப்பப்படவில்லை.

கட்டுநாயக்காவிலிருந்து சிறப்பு ஹெலிக்கொப்டரில் கொழும்புக்கு வந்த குழுவினர், தமது பயணம் இரண்டு நாள்

## இந்தியக் குழு இங்கு பேசியவை என்ன?

கள் மட்டுமே என்று வரையறுக்கப்பட்டிருந்ததால் உடனடியாகவே தமது சந்திப்புகளைத் தொடங்கினர்.

முதலில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக சுமார் இரண்டரை மணிநேரம் மூடிய அறைக்குள் பேசினர்.

அதனைத் தொடர்ந்து அன்று பிற்பகல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானைச் சந்தித்து

## பாதுகாப்பு ஒப்பந்தம் எதனையும் இந்தியா செய்ய் முடியாது

மலையக மக்கள் நலன் குறித்த விடயங்கள் பற்றியும் மலையகப் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் தேடுதல் என்ற பெயரிலான படையினரின் நடவடிக்கைகள் குறித்தும் பேசப்பட்டது.

அடுத்த நாள் காலை ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்பை மேற்கொண்ட குழுவினர் அடுத்த சந்திப்புக்கு தயாராகினர்.

**மஹிந்தவுடனான சந்திப்பு**

இலங்கை அரச தலைவருடனான முக்கியமான சந்திப்புத் தொடங்கியது.

சந்திப்பில் மஹிந்த ராஜபக்ஷவுடன் அவரது செயலாளர் லலித் வீரதுங்க, பஸில் ராஜபக்ஷ ஆகியோரும் உடனிருந்தனர்.

இந்திய அரசு முகம் கொடுக்கும் விடயங்கள் பற்றி ஆவலாக விசாரித்த மஹிந்தவுக்குச் சுருக்கமாக விடையளித்து விட்டுத் தாம் வந்த நோக்கத்தின் பக்கம் பாதுகாப்பு ஆலோசகர்நாராயணன்பேச்சைத்திருப்பினார்.

இனப்பிரச்சினைவிவகாரத்தில் இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள், இந்திய மத்திய அரசை இந்த விடயத்தில் தலையிடவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கியிருக்கின்றன எனவும் -

இலங்கை அரசின் தொடர்ச்சியான இரா

## வடக்கை 6,7 மாதங்களில் கைப்பற்ற முடியாது; சார்க் மாநாட்டுக்கு முன் தீர்வுத்திட்டக் கொள்கை விளக்கத்தை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும்

ணுவ நடவடிக்கைகளால் தமிழக அரசின் பாரிய அழுத்தத்துக்கு இந்திய மத்திய அரசு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் -

இதனால் இதற்கு மேல் தாம் மௌனமாக இருக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் - நாராயணன் கூறினார்.

**சீன, பாக். தொடர்புகள்**

சீனாவிடமிருந்து முப்பரிமாண ராடர்கள் மூன்றைக் கொள்வனவு செய்துள்ள இலங்கை இராணுவம், அவற்றை யாழ். குடாநாட்டில் சீனாவின் உதவியுடன் பொருத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. இது இந்தியாவின் பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தலான விடயம் என்று தெரிவித்த நாராயணன் சீனாவிடமிருந்து இலங்கை அரசு கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ள 'ஜினாக் - 7' தாக்குதல் வானூர்தி, ஜே.வை. - 1 வானூர்தி உட்படப் புதிய ரக ஏவுகணைகள், போர் டாங்கிகள், வானூர்தி எதிர்ப்பு ஏவுகணைகள் ஆகியவை அடங்கிய நீண்ட பட்டியலை மஹிந்தவின் முன் தூக்கிப்போட்டார்.

அத்துடன் நிற்காமல் இலங்கைப் படையினர் பயிற்சி நடவடிக்கைக்காக பாகிஸ்தானுக்குச் செல்வதும் அந்நாட்டு புலனாய்வு அதிகாரிகள் இலங்கைக்கு வந்து செல்வதும் இந்தியாவின் பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தல் என்றும் -

இனிமேல் பாகிஸ்தான் அதிகாரிகள் எவர் இலங்கைக்கு வருவதாக இருந்தாலும் அவர்களின் வருகை குறித்து இலங்கை முன்கூட்டியே இந்தியாவுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் - நாராயணன் கடும் தொனியில் கூறினாராம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறிக்கிட்ட மஹிந்த, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றமையால் அவற்றை அழித்தொழிக்கத் தமக்கு ஆயுதங்கள் மற்றும் படை உபகரணப் பலம் தேவை என்றும், இந்தியா அதற்கு உதவி செய்யாததாலேயே தமக்கு உதவி செய்ய முன்வந்துள்ள சீனாவிடமும் பாகிஸ்தானிடமும் தாங்கள் செல்கின்றார்கள் என்று கூறியதுடன் தமது படைகள் கிழக்கை மீட்டு விட்டன எனவும் வடக்கிலும் பாரிய வெற்றிகளைப் ஈட்டி வருகின்றனர் எனவும் தமது படையினர் பற்றிப் பெருமையாகக் கூறினார்.

இதற்குப் பதிலளித்த நாராயணன், தற்காப்பு ஆயுதங்களையே இலங்கைக்கு இந்தியா வழங்குமே தவிர தாக்குதல் ஆயுதங்களைத் தராது என்று தெரிவித்தார்.

**இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம்**

''இந்திய மத்திய அரசு பாரிய அரசியல் அழுத்தங்களுக்கு முகம்கொடுத்த போதும் இரு பரிமாண ராடர்களை இலங்கைக்கு விரைந்து வழங்கியது. இலங்கை இராணுவத்திற்கான [illegible] யது. விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களைக் கண்டுபிடித்து அழிக்க உதவியதுடன் அவர்களின் ஆயுத மார்க்கங்களை முடக்க இலங்கைக்குத் துணை புரிந்தது.

''ஆனால், இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வை முன்வைக்குமாறு இலங்கையை வலியுறுத்தக் கோரி இந்தியாவின் மத்திய அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் தரப்பட்ட வண்ணமே உள்ளது. இதனை இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறினால், தீர்வை முன்வைப்பதற்கு - பல்வேறு தருணங்களில் - பலதரப்பட்ட கால அவகாசங்களைத்தான் இலங்கை அரசு முன்வைத்தது. இன்றைய நிலையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைப்பதற்கு இலங்கை அரசு கோரும் கால அவகாசம் என்பது நகைச்சுவைக்குரிய விடயமாகிவிட்டது." - என்று நாராயணன் கூறினார்.

அத்துடன் வடக்கு - கிழக்கு மக்களுக்கு விமோசனமளிக்கக்கூடிய - ஐக்கிய இலங்கைக்குள்ளான - தீர்வுத் திட்டத்தை இலங்கை அரசு உடனடியாக முன்வைக்க வேண்டும் என்றும், அது இலங்கை அரசு அமைத்த அனைத்துக் கட்சி மாநாட்டின் இடைக்காலத் திட்ட வரைவை ஒட்டியதாக அமையவேண்டும் என்றும் நாராயணன் அழுத்தமாகக் கூறினார்.

இதற்குப் பதிலளித்த மஹிந்த கிழக்கை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டியமை போன்று இன்னும் ஏழு, எட்டு மாதங்களில் வடக்கையும் மீட்டுவிட்டுத் தமது அரசு இறுதித் தீர்வை முன்வைக்கும் என்றார்.

இதற்குப் பதிலளித்த நாராயணன் -

அரசும் படைகளும் கூறுவதைப் போன்று வடக்கை ஆறு, ஏழு மாதங்களில் விடுதலைப் புலிகளிடமிருந்து இலங்கை அரசு படைகளால் கைப்பற்றிவிட முடியாது. எமது புலனாய்வுத் தகவல்கள் அதனை உறுதி செய்திருக்கின்றன.

''ஆகவே, இலங்கை அரசு தனது தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமென ஆறு, ஏழு மாதங்கள் இந்தியாவால் இனியும் எதிர்பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மூன்று மாதங்களுக்குள் அனைத்துக் கட்சி மாநாடு ஊடாக இறுதித் தீர்வு குறித்த பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும்.

''அத்துடன் சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றிடமிருந்து இலங்கை மேற்கொள்ளும் ஆயுதக்கொள்வனவை உடனடியாக நிறுத்தவேண்டும். தேவையான ஆயுதங்களை இந்தியா வழங்கும்'' என்று நறுக்காகக் கூறினார்.

இதனை தனக்கு சார்பாக மாற்றிக் கொள்ள மஹிந்த -

**பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யலாமா?**

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது என்றால் கைவிடப்பட்ட இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏன் நாம் மீண்டும் ஆராய்ந்து அதில் கையெழுத்திடக்கூடாது என்று கேள்வி எழுப்பினார்.

தற்போது இந்திய மத்திய அரசு முகம் கொடுத்து வரும் அழுத்தங்களுக்கு மத்தியில் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிப் பேசமுடியாது என்று நாராயணன் பதிலளித்தார்.

அப்படியானால் இந்திய அரசுடன் இலங்கை எப்படி நம்பிக்கையை கட்டி எழுப்புவது என்று மஹிந்த கேட்டார்.

அதற்குப் பதிலளித்த நாராயணன், நம்பிக்கையின் அடிப்படையில் இலங்கையுடன் உறவு வைத்துக்கொள்ள இந்தியா தயாராகவுள்ளது. அதற்கு இலங்கை தயார் இல்லை என்றால் அதற்கேற்றவாறு இந்தியாவும் செயற்படும் என்று காட்டமாகக் கூறினார்.

சார்க் மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் வருகை தருவது தொடர்பாக அடுத்துப் பேசிய இந்திய உயர்மட்டக்குழு வினர் கொழும்பின் தற்போதைய நிலையில் பாதுகாப்பற்ற பிரதேசம் என்ற விடயத்தை தெளிவாக மஹிந்தவுக்கு எடுத்துக் கூறினர்.

அத்துடன் கடந்த தடவை இந்தியப் பிரதமர் கொழும்பு வந்த சமயம் இலங்கைப் படைத்தரப்பைச் சேர்ந்தவரே இந்தியப் பிரதமரைத் தாக்கிய சம்பவம் இடம் பெற்றுள்ளதால், இந்தியப் பிரதமர் இம்முறை பயணம் செய்வதானால் அதற்கு இந்தியா முன்வைக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இலங்கை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் உயர்மட்டக் குழுவினர் மஹிந்தவிடம் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின்படி சார்க் மாநாடு நடைபெறும் சமயம் கொழும்பில் தாக்குதல்களை நடத்தப் புலிகள் திட்டமிட்டிருக்கின்றனர் எனத் தெரிவித்த உயர்மட்டக் குழுவினர், இந்தியப் பிரதமரின் வருகையின் பொருட்டு இந்தியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும் என்றும் அவர்கள் அழுத்தமாகக் கூறினர்.

அத்துடன் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருவதாக இருந்தால் தாம் முன்வைக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

**இந்தியாவின் நிபந்தனைகள்**

அவர்கள் முன்வைத்த நிபந்தனைகள்-

ஒன்று: மாநாடு நடைபெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே கொழும்புக்கு வரும் இந்தியாவின் சிறப்பு அதிரடிப்படையினர் மாநாடு நடைபெறும் மண்டபம் மற்றும் மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பளிப்பர்.

இரண்டு: இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டுக்காக இந்தியாவிலிருந்து குண்டு துளைக்காத வாகனங்கள், சிறப்புக் ஹெலிகள், தாக்குதல் வானூர்தி ஆகியவை கொழும்புக்குக் கொண்டுவரப்படும்.

மூன்று: புலிகளின் வான் தாக்குதல்களை முன்கூட்டியே அறியும் வகையில் கொழும்பில் சில இடங்களில் இந்திய வான் படையின் கண்காணிப்பின் கீழ் ராடர்கள் பொருத்தப்படும்.

நான்கு: கொழும்பை அண்டிய கடல் பகுதிகளில் இந்தியக் கடற்படையினர் தமது அதிவேக அதிரடிப் படகுகளில் பாதுகாப்பு சுற்றுக்காவல் கடமையில் ஈடுபடுவர்.

ஐந்து: இனப்பிரச்சனை தொடர்பான இலங்கை அரசின் அரசியல் தீர்வுத் திட்டத்தை அரசின் கொள்கையாக - சார்க் மாநாட்டுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்த வேண்டும். இல்லையேல், இலங்கை அரசுக்குப் பாரிய சிக்கலை ஏற்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமரின் சார்க் மாநாட்டு உரை அமையும்.

தனது அரசுக்குப் பாரிய சிக்கலை ஏற்படுத்தக்கூடிய இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் இவை தொடர்பில் இந்திய உயர்மட்டக் குழுவினருடன் பல தடவைகள் சமரசம் செய்ய முயற்சித்தும், அதற்கு இணங்க மறுத்த அக்குழு நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாதால் இறுதியில் அனைத்து நிபந்தனைகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிந்தார் - என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## திருமலை சென்ற மாணவர்கள் இன்று திரும்புகின்றனர்

திருகோணமலை, ஜூன் 30

வவுனியாவில் நடைபெறவிருந்த, ஒத்திவைக்கப்பட்ட மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளச் சென்று திருகோணமலையில் தங்கியுள்ள யாழ்.மாவட்ட மாணவ, மாணவிகள் இன்று யாழ்ப்பாணம் திரும்புகின்றனர்.

திருமலையில் இருந்து நேற்று புறப்பட்ட கப்பலில் இவர்கள் பயணம் மேற்கொள்கின்றனர். இன்று அவர்கள் யாழ்ப்பாணம் சென்றடைவர். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமல் வீரவன்ஸவின் கட்சியின் முதல் கூட்டம் இன்று கொழும்பில்!

## ஜே.வி.பி. குழப்ப முயற்சி என அவர் சீற்றம்

கொழும்பு, ஜூன் 30

விமல் வீரவன்ஸவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் முதலாவது பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நுகேகொடையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தைக் குழப்புவதற்காக ஜே.வி.பி. முயற்சி செய்து வருகின்றது என்று தெரிவித்த விமல் வீரவன்ஸ, எத்தடை வந்தாலும் கூட்டம் நடத்தி முடிக்கப்படும் என்று கூறினார்.

இதுதொடர்பாக அறிவிக்கவென விமல் வீரவன்ஸ நேற்று பத்தரமுல்லையில் உள்ள அவரது கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்படி தகவலைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

எமது கட்சியின் முதலாவது பொதுக்கூட்டம் திங்கட் கிழமை 3 மணிக்கு நுகேகொடையில் இடம்பெற்றவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் பல முக்கியமான நிகழ்வுகள் இடம்பெறும். அவை நாட்டுக்கு மிகவும் அவசியமானவையாக அமையும்.

கட்சி பேதங்களுக்கப்பால் நின்று அனைத்து அரசியல் கட்சியினரையும் பொதுமக்களையும் இக்கூட்டத்திற்கு வருகை தருமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

எமது கூட்டத்தைக் குழப்புவதற்காக ஜே.வி.பியினர் முயற்சி செய்து வருகின்றனர். எத்தடை வந்தாலும் இக்கூட்டத்தை நாம் நடத்தி முடிப்போம்.

இதேவேளை, நாட்டுக்குத் தேவையான வகையில் பல அரசியல் தீர்மானங்கள் எடுக்கும் நோக்கில் நாம் கிழக்கின் முதலமைச்சர் பிள்ளையானை சந்தித்துப் பேசினோம்.

ஏகாதிபத்தியத்துக்கும் பயங்கரவாதத்திற்கும் எதிராகவும் ஜனநாயகத்திற்கு ஆதரவாகவும் பிள்ளையான் செயற்படுவதன் காரணத்தால் அதே கொள்கைகளைக் கொண்ட நாம் பிள்ளையானைச் சந்தித்துப் பேசினோம். எமது அரசியல் செயற்பாட்டில் இது ஒரு முக்கிய கட்டமாகும்.

தற்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக நாங்கள் இருவரும் விரிவாக ஆராய்ந்தோம். ஏகாதிபத்திய எதிர்ப்பாளரான பிள்ளையானுடன் சேர்ந்து செயற்படுவது இந்நாட்டுக்கு நன்மைபயக்கும் என்று நாம் நம்புகிறோம்.- என்றார். (அ-சி)

## துணுக்காய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த துணுக்காய் உதவி அரச அதிபர் இத்தாக்குதலில் அந்த இடத்திலேயே பலியானார் எனக் கூறப்பட்டது.

இத்தாக்குதலை இலங்கை அரசுப் படைகளின் ஆழ ஊடுருவும் அணியே நடத்தியிருப்பதாகப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (உ)

## யுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் பிள்ளையான் ஆயுதங்களைக் கைவிட்ட பின்னரே அவரை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் இந்தியா இராஜதந்திரரீதியில் இலங்கையை அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை அரசு தெரிவிக்கும் கால எல்லைக்குள் யுத்தம் முடிவடையப் போவதில்லை என்பதை வலியுறுத்தியுள்ள இந்தியா, விமானக்குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட - இடம்பெயர்ந்த - மக்களின் எண்ணிக்கை குறித்த புள்ளி விவரங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளதுடன் விமானத்தாக்குதல்களால் ஏற்படும் இழப்புகளைக் குறைக்குமாறும் இலங்கையைக் கோரியுள்ளது.

இந்திய - இலங்கைப் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது குறித்து இலங்கை முன்வைத்த யோசனையையும் இந்தியா இச்சந்திப்பின்போது நிராகரித்துள்ளது.

இந்திய அரசு தற்போது எதிர்கொண்டுள்ள அரசியல் அழுத்தங்களுக்கு மத்தியில் இது சாத்தியமில்லையென இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கை காரணமாக வடபகுதித் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை குறித்து, தென்னிந்தியாவால் புதுடில்லிக்குக் கொடுக்கப்படும் அழுத்தம் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவிலிருந்து மத்திய அரசிற்குக் கொடுக்கப்படும் கடும் அழுத் தம் காரணமாக இந்தியாவால் எதிர்காலத்தில் இலங்கை விவகாரம் குறித்து மௌனமாக இருக்க முடியாது எனவும் இச்சந்திப்பின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனா,பாகிஸ்தானிடமிருந்து இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதையும் இந்தியா உன்னிப்பாக அவதானித்த வண்ணமுள்ளதாக இச்சந்திப்பின் போது இந்தியப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சீனாவிடமிருந்து 3-டி ராடர்களைக் கொள்வனவு செய்துள்ளமை இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. குறிப்பாகத் தென்னிந்தியாவிலுள்ள பாதுகாப்பு நிலைகளுக்கு ஆபத்தாகவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவுக்கு அறிவிக்காமல் ஆயுதக் கொள்வனவு செய்யக்கூடாது

சீனாவிடமிருந்து இலங்கைப் பாதுகாப்புப் படையினர் கொள்வனவு செய்யவுள்ள தாக்குதல் விமானங்கள் உட்பட ஏனைய ஆயுதங்கள் குறித்த விவரத்தினை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த இந்திய உயர்மட்டக் குழு, இந்தியாவிற்கு அறிவிக்காமல் இனி இலங்கை ஆயுதக் கொள்வனவில் ஈடுபடக் கூடாது என்றும் அறிவுறுத்தியுள்ளதாம்.

அதிக எண்ணிக்கையான இலங்கை அதிகாரிகள் பாகிஸ்தானில் பயிற்சி பெறுகின்றனர். மேலும் பாகிஸ்தானின் புலனாய்வு அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்து இங்குள்ள அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றுகின்றனர் - என்றும் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், இதுவும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாகிஸ்தான் புலனாய்வு அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள சந்தர்ப்பத்தில் அது குறித்து முற்கூட்டியே தனக்கு அறிவிக்குமாறு புதுடில்லி கேட்டுள்ளது.

### அரசியல் தீர்வை உடனடியாக முன்வைக்க வேண்டும்

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காணுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் குறித்து இலங்கை அரசு அக்கறை செலுத்தாததால் - இந்திய அரசு கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு அரசியல் தீர்விற்கான காலக்கெடுக்களைத் தெரிவித்த போதிலும் அவை சாத்தியமாகவில்லை.

இலங்கை அரசு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உடனடியாக அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு யுத்தம் முடியும் வரை அரசியல் தீர்விற்காகக் காத்திருக்கத் தயாரில்லை என்றும் சார்க் உச்சிமாநாட்டிற்கு முன்னர் தீர்வை முன்வைக்குமாறும் இந்தியக்குழு கேட்டுள்ளது.

தென்னிலங்கையில் அரசியல் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் இந்திய உயர்மட்டக் குழுவினர் கேட்டறிந்துள்ளனர்.

இந்திய உயர்மட்டக் குழுவினர் பொருளாதார விடயங்கள் குறித்தும் இலங்கைத் தரப்புடன் கலந்துரையாடியுள்ளனர்.

பெற்றோலிய வளத்துறை அமைச்சரின் பகிரங்கக்கருத்துக் குறித்தும் மேற்படி சந்திப்பின்போதுகவலைதெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை எதிர்கொள்ளும் உணவு, எரிசக்தி நெருக்கடிக்கு இந்திய நிறுவனங்களை பலிக்கடாக்கள் ஆக்க வேண்டாமென வேண்டுகோள் விடுத்த இந்தியக் குழுவினர் இது இரு நாடுகளினதும் இருதரப்பு உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என எச்சரித்துள்ளனர் என்றும் கூறப்பட்டது. (அ-சி)

## ஆழ ஊடுருவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட ஆழ ஊடுருவும் அணியைச் சேர்ந்தவர், ஜெனிவா கடப்பாடுகளை மீறி தாக்குதலின்போது விடுதலைப் புலிகளின் சீருடையை அணிந்திருந்தார் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# அரச துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு அடுத்த மாதம் தொடக்கம் விசேட கொடுப்பனவு

கொழும்பு, ஜூன் 30

அரச துறையில் உள்ளவர்களுக்கு அடுத்த மாதம் தொடக்கம் மாதாந்த சம்பளத்துடன் விசேட கொடுப்பனவாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

அரசு துறை சார்ந்த தொழில் சங்கங்களுடன் நேற்று ஜனாதிபதி நடத்திய பேச்சை அடுத்தே இந்த இணக்கம் காணப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டது.

இதேவேளை,

தனியார் துறையினருக்கு சம்பள உயர்வு கோரி தேசிய தொழில் சங்க மத்திய நிலையம் மேற்கொள்ளவுள்ள தொழிற்சங்கப் போராட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்கவுள்ளதாக அனைத்து வர்த்தக வலையமைப்பு கூட்டமைப்புத் தெரிவித்திருக்கிறது.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு சமாந்தரமாக சம்பளமும் அதிகரிக்கப்படவேண்டும் என்றும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## உயர் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையை நோக்கி செல்ல முயன்ற சம்பவத்தை தொடர்ந்தே இது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் பேரணிகள்,ஆர்ப்பாட்டங்களைமேற்கொள்வதன் மூலம் அங்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதை தடுப்பதே இதன் நோக்கம் என அரசுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் புதிய விதிமுறைகள் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் பொது மக்கள் நடமாடுவதை தடை செய்யாது என்றும் தெரிய வருகின்றது.

மேலும் குறிப்பிட்ட பகுதிகளுக்குள் செல்வதற்குத் தகுதி வாய்ந்த அதிகாரியொருவரின் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 'சார்க்' உச்சி மாநாடு நடைபெறவுள்ளமையும் இவ்வாறான புதிய விதிமுறைகளுக்கான தேவையை உருவாக்கியுள்ளது என்றும் கூறப்பட்டது. (அ-சி)

## கொழும்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆள்கடத்தல்களும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

- இவ்வாறு மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, வெள்ளவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் நூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு, பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டமை தொடர்பில் அவரிடம் கேட்டபோதே மனோகணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் 'உதயனு'க்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'பாதுகாப்பு நடவடிக்கை' என்ற பெயரில் இராணுவத்தினரும், பொலிஸாரும் தமிழ் மக்களை வகை தொகையின்றிக் கைதுசெய்கின்றனர். இதே பெயரில்தான் சனியன்றும் வெள்ளவத்தையில் நூற்றுக் கணக்கான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

நான் அண்மையில் 'வடக்கு -கிழக்கு மக்கள் தற்காலிகமாக கொழும்பு நகருக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும்' என்ற சாரப்பட வெளியிட்ட அறிக்கையை விமர்சித்து ஜனாதிபதிச் செயலகம் பிறிதொரு அறிக்கையை விடுத்திருந்தது.

இப்போது நான் சொல்லிய கூற்று எவ்வளவு தூரம் சரியானது என்பதை சனிக்கிழமை நடந்த கண்மூடித்தனமான கைதுகள் நிரூபிக்கின்றன.

கடத்தல்களும் தற்போது அதிகமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ தமிழர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் மீண்டவர்கள் எத்தனை, மாண்டவர்கள் எத்தனை என்று அரசு தான் பொறுப்புக்கூறவேண்டும். இந்த மோசடி வேலைகளில் ஈடுபடுபவர்களும் அவர்களே.

இந்தச் செயல்களை நோக்கும்போது தந்தை செல்வா கூறியமை போல ''ஈழத் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்ற வாசகத்தின் யதார்த்தம் புரிகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், மேலக மக்கள் முன்னணியின் தலைவர் என்ற முறையிலும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளர் என்ற ரீதியிலும் நான், என்னால் இயலுமான அனைத்தையும் கடத்தல் மற்றும் கைதுகளுக்கு எதிராகவும் அரசின் அராஜகங்களுக்கு எதிராகவும் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் வெளிப்படுத்த, அம்பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

வெள்ளவத்தையில் சனியன்று இடம்பெற்ற கைதுகள் தொடர்பாக இதுவரை நாடாளுமன்றில் அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்போரே பொறுப்புக் கூறவேண்டும் - என்றார். (சி)

### திருமலை சென்ற மாணவர்கள் இன்று திரும்புகின்றனர்

திருகோணமலை, ஜூன் 30

வவுனியாவில் நடைபெறவிருந்து, ஒத்திவைக்கப்பட்ட மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளச் சென்று திருகோணமலையில் தங்கியுள்ள யாழ்.மாவட்ட மாணவ, மாணவிகள் இன்று யாழ்ப்பாணம் திரும்புகின்றனர்.

திருமலையில் இருந்து நேற்று புறப்பட்ட கப்பலில் இவர்கள் பயணம் மேற்கொள்கின்றனர். (அ-1)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை ஓய்வு பெற்றுச் செல்லும் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேராவுக்கான பிரியாவிடை வைபவம் இன்று இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 4 மணிக்கு பம்பலப்பிட்டி பொலிஸ் பூங்காவில் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையுடன் இப்பிரியாவிடை வைபவம் இடம்பெறும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ-சி)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்களின் சடலங்களைப் பொலிஸார் நேற்றுக்காலை மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாரதிபுரத்தில் ஒருவருடைய சடலமும் எட்டாம் கட்டையில் மற்றொருவருடைய சடலமும் கண்டெடுக்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சடலங்கள் இதுவரை அடையாளங்காணப்படவில்லை என்றும் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தன என்றும் கூறப்படுகிறது. (சி)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சலுகையை நீடிக்குமாறு வேண்டுகோள் விடுத்தோம்.

எமது பேச்சுகளில் இதுவே முக்கிய விடயமாக இடம்பெற்றது.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை வழங்குவது குறித்து அவர்கள் தீர்மானிப்பதற்கு இன்னமும் கால அவகாசமுள்ளது. ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முதல் நாம் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும். டிசெம்பர் 15ஆம் திகதி அவர்கள் இது குறித்து அறிவிப்பார்கள்.

அவர்கள் இங்கு மனித உரிமை நிலைவரம் குறித்து சில கேள்விகளை எழுப்பினார்கள். நாங்கள் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக நாடு உள்ள குழப்பமான நிலையையும், பாதுகாப்பு கரிசனைகள் உள்ளமையையும் எடுத்துரைத்தோம்.

எனினும் எங்களால் முடிந்த வரை நிலைமையைச் சிறப்பாக கையாள்கிறோம் என அவர்களிடம் தெரிவித்தோம். நாங்கள் இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை எடுத்துரைத்துள்ளோம்.

இலங்கையில் உள்ள நிலைமையை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என நான் தெரிவித்தேன்.

இலங்கையின் நிலைமை குழப்பகரமானது. இலங்கையில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரிகையில் ஏதாவது ஒரு காரணத்திற்காக ஜி.எஸ்.பி.சலுகை நிறுத்துவது நியாயமற்றது. அது பெரும் பாதிப்பைத் தரும்.

மூதூரில் மனிதாபிமான பணியாளர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அவர்கள் நேரடியாக என்னிடம் கேள்வி எழுப்பவில்லை. எனினும் பட்டினிக்கு எதிரான அமைப்பு பிரான்ஸ் அரசுடன் இது குறித்து நேரடியாக தொடர்புகொண்டுள்ளது. - என்றார் அமைச்சர் பீரிஸ். (அ-உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.